# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 23 திங்கட்கிழமை (05-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:70


## மார்ச் 2ஆம் வாரத்தில் அரசு - புலிகள் பேச்சு?

கொழும்பு,பெப்.5

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் பேச்சுக்கள் ஆரம்பமாகும் வாய்ப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக கொழும்பு அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விவகாரத்தில் நடுநிலையாளராகச் செயற்படும் நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம், கொழும்பில் கடந்தவாரம் நடத்திய கலந்துரையாடல்களின் பயனாக சமாதானப் பேச்சுக்கான இணக்க நிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை கொழும்பு வந்து சேர்ந்த எரிக் சொல்ஹெய்ம் நேற்றுக்காலை கொழும்பில் இருந்து புறப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதியுடன் மூன்று சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

அதன் பயனாக அரசு - புலிகள் இடையே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான இணக்க நிலை உருவானது.

சமாதானப் பேச்சுக்கான உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நோர்வே முன்மொழிந்த புரிந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிக்கொடிகள்-கறுப்புக் கொடிகள் மட்டக்களப்பில் நேற்றுத் தாராளம்!

மட்டக்களப்பு,பெப்.5

சுதந்திரதினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று கறுப்புக் கொடிகளும் புலிக்கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்ததாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான பிரதான சுதந்திரதின வைபவம் இடம்பெற்ற புனித மிக்கேல் கல்லூரிக்குச் சமீபமாக நேற்று அதிகாலை முதல் பெரிய அளவிலான புலிக்கொடி பறக்க விடப்பட்டிருந்ததாகவும் -

பின்னர் காலை 8 மணியளவில் அந்தப் பகுதிக்கு வந்த பொலீஸார் அந்தக் கொடியை எடுத்துச் சென்றனர் எனவும் -

அந்தச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை -

மட்டக்களப்பு நகரில் வழமையை விட நேற்றுப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுதந்திர மாணவர் முன்னணி நேற்றைய சுதந்திரதினக் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரிக்குமாறு அழைப்பு விடுத்திருந்தது. (உ-7)

## சுதந்திரதின உரையில் அரசியல் திருப்பம் பற்றிய அறிவிப்பு!

# புலிகள் தரப்பிலிருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளது என்கின்றார் ஜனாதிபதி

## இந்த நல்ல சந்தர்ப்பத்தை உரியமுறையில் பயன்படுத்தப் போவதாகவும் தெரிவிப்பு

கொழும்பு,பெப்ரவரி5

**"பேச்சுக்களை நடத்துவது தொடர்பாக விடுதலைப் புலிகளின் தரப்பிலிருந்து ஓரளவு சாதகமான பதில் கிடைத்துள்ளது. இந்த நல்ல சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்குச் சுமூகமான தீர்வுகாண முயற்சிப்போம்."**

**- இவ்வாறு கூறியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

**இலங்கையின் 53 ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு அவர் நேற்று ஆற்றிய உரையிலேயே இந்த அரசியல் திருப்பம் பற்றிய அறிவிப்பை விடுத்தார்.**

கொழும்பு கோட்டே ஸ்ரீ ஜெயவர்தனபுரவில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்துக்கு முன்பாக இடம்பெற்ற சுதந்திரதின நிகழ்வுகளின் போது ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையை அவர் ஏற்றுக்கொண்டார்.

அங்கு தமது சுதந்திரதின உரையை அவர் நிகழ்த்தினார். அப்போது அவர் கூறியதாவது:-

(12ஆம் பக்கம் பார்க்க)



## மோட்டார் தாக்குதல்

கொழும்பு,பெப்.5

முகமாலை, நாகர்கோயில் பகுதிகளில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் நாகர்கோயிலில் சிப்பாய் ஒருவர் காயம் அடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பாதுகாப்புக் கெடுபிடிகள் இன்றி கொழும்பில் சுதந்திரதின நிகழ்வு

கொழும்பு,பெப்.5

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை அறிவித்து அதைக் கடைப்பிடித்து வருவதால் -

தலைநகரில் சுதந்திரதினக் கொண்டாட்டத்தை ஒட்டி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் இருக்கவில்லை.

சுதந்திரதினக் கொண்டாட்டங்களை ஒட்டி கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது வழமையாகும்.

எனினும் நேற்றைய சுதந்திர தினக் கொண்டாட்டங்களை ஒட்டி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

சுதந்திரதின வைபவம் இடம்பெற்ற - கோட்டே ஸ்ரீ ஜெயவர்தனபுரத்தில் உள்ள - நாடாளுமன்றப் பகுதியிலும் இம்முறை வழமைக்கு மாறாக - பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

வழமையான சோதனை நடவடிக்கைகள் எதுவும் இன்றி மக்கள் அந்த வைபவத்தில் பங்கு கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

பாதுகாப்புப் படையினர் பெரிய எண்ணிக்கையில் அங்கு பணியில் ஈடுபட்டிருக்கவில்லை. பொலீஸார் மட்டும் போக்குவரத்து ஒழுங்குகளைக் கவனித்தனர்.

எனினும் யாழ்ப்பாணத்தில் படையினரின் பாதுகாப்பு வழமையைவிட அதிகரித்துக் காணப்பட்டது. பல இடங்களில் தேடுதல்களும் மேற்கொள்ளப்பட்டன. (உ-3)

## யாழ்.செயலகத்தில் நேற்று சுதந்திரதின நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,பெப்.5

இலங்கையின் 53வது சுதந்திரதின நிகழ்வுகள் நேற்று அமைதியான முறையில் யாழ்.செயலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

சுதந்திர தினத்தை ஒட்டி விசேட பூசை வழிபாடுகள், தேசியக் கொடியேற்றல், சிரமதானம் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளில் யாழ்.அரச அதிபர் மற்றும் மேலதிக அரச அதிபர் உட்பட செயலக ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

சுதந்திர தினத்தை ஒட்டி யாழ். நகரில் உள்ள அரச வங்கிகள்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகத்தில் துக்கதினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.5

இலங்கையின் 53வது சுதந்திர தினமான நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்கள் கறுப்புப் பட்டிகளை வழங்கியும் கறுப்புக் கொடியை பறக்கவிட்டும் சோக இசையை ஒலிபரப்பியும் இந்தத் துக்க தினத்தை அனுஷ்டித்தனர்.

சுதந்திரதினத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பல்கலைக்கழக சூழலில் சுவரொட்டிகள் பல ஒட்டப்பட்டிருந்தன.

"ஸ்ரீலங்காவின் சுதந்திரநாள் தமிழ

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் பாதயாத்திரை ஆரம்பம் இருபதாயிரம் மக்கள் பங்கேற்பு!

கண்டி,பெப்.5

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவற்றைக் கண்டித்து அரசுக்கு எதிராக ஐ.தே. கட்சி ஏற்பாடு செய்துள்ள பாதயாத்திரை தலதாமாளிகையில் இடம்பெற்ற சமய நிகழ்ச்சியுடன் நேற்று ஆரம்பமானது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்தப் பாதயாத்திரையில் சுமார் இருபதாயிரம் பொதுமக்கள் பங்கேற்றனர்.

கண்டியில் உள்ள இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ ஆலயங்களிலும் இடம்பெற்ற விசேட மத நிகழ்ச்சிகளை அடுத்து பாதயாத்திரை ஆரம்பமானது.

பாதயாத்திரையில் பங்கு பற்றியோர் அரசுக்கு எதிரான கோஷங்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் பகுதியில் வைத்து கிரனேட்டுடன் இருவர் கைது

கொழும்பு,பெப்.5

நல்லூரில் படையினர் நிறுத்துமாறு விடுத்த உத்தரவை மீறிப் பயணித்த இரு இளைஞர்களைப் படையினர் கைது செய்துள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சைக்கிளில் சென்ற இருவரைப் படையினர் மறித்ததாகவும் -

அவர்கள் தப்பிச் செல்ல முயன்றதாகவும் -

எனினும் படையினர் அவர்களைக

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.மாநகரசபை ஆணையாளர்

**திரு.வே.பொ.பாலசிங்கம்** அவர்கள்

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக பதவியேற்றிருப்பதை நாம் பாராட்டி அவர் பணி சிறக்க வாழ்த்துவதோடு, ஆட்டோக்களினதும் எமது சங்கத்தினதும் சேவைக்கு உணர்வுபூர்வமான ஒத்துழைப்புக்களைப் பல வழிகளிலும் ஆணையாளர் அவர் வழங்கியதை நாம் அனைவரும் இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூருகின்றோம்.

மேலும் புதிய யாழ். மாநகரசபை ஆணையாளராகப் பதவி ஏற்றுள்ள

**திரு.இராசா தணிகாசலம்பிள்ளை**

அவர்களையும் பாராட்டி அவர் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

*முனீஸ்வரன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

வடபிராந்திய முச்சக்கர மோட்டார்
ஊர்திச் சேவைச் சங்கம்
(ஆட்டோ) (83759)

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 05 - 02 - 1937



உதிர்வு 31 - 01 - 2001

### அமரர் குமார் நடராஜா

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது ஜேர்மனியில் வசித்து அண்மையில் காலமானவருமான குமார் நடராஜா அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ந.தங்கரத்தினம்,
*போக்காலை வீதி,*
*இமையாணன், உடுப்பிட்டி.* (83764)

- உறவினர்கள்.

## கழிவுகளை அகற்ற பிரதேசசபை உதவும்

யாழ்ப்பாணம்,பெப்.5

நல்லூர் பிரதேசசபை குடியிருப்பாளர்களின் மலசலக்கூடக் கழிவுகளை அகற்றுவதற்கு விசேட ஒழுங்குகளை அந்தப் பிரதேசசபை செய்துள்ளது.

மலசலக்கூடக் குழிகள் நிரம்பும் போது அதைத் துப்புரவு செய்யும் பணியை பிரதேசசபை மேற்கொள்ளவிருக்கின்றது என்றும் -

இத்தகைய சேவை தேவைப்படுபவர்கள் சபையின் தலைமையகத்தில அதற்கான கட்டணத்தைச் செலுத்தி சுத்திகரிப்பை மேற்கொள்ளலாம் என்றும் -

பிரதேசசபைத் தலைவர் க.மணி பல்லவராஜன் தெரிவித்தார். (உ-3)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.5

சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வனமைப போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் .45 மணியளவில் வித்தியாலய அதிபர் கு.ஜெகதீஸன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளா க.தனபாலசிங்கம் கலந்து கொள்வார். (உ-3)

## ஆசிரியர் சங்க புனரமைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.5

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளையின் புனரமைப்புக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வட.இந்து மகளிர் கல்லூரியில் சங்கத்தின் யாழ் மாவட்டப் பொருளாளர் எஸ். கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பிரதம விருநதினராக வடமராட்சி வலயக கல்விப் பணிப்பாளர் சி.சிவராசாவும் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர்களான வின்சென்ட், கணபதிப்பிள்ளை ஆகியோரும் கலந்துகொள்வர். (உ-3)

## கோபுரத் திருப்பணி புதன் ஆரம்பம்

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயிலில் பஞ்ச தளராஜ கோபுரத் திருப்பணி நாளைமறுதினம் புதன்கிழமை காலை 7.30 மணிக்கும் 8.30 மணிக்கும் இடையில் வரும் சுபவேளையில் அத்திபாரம் இடும் நிகழ்வுடன் ஆரம்பமாக இருக்கிறது.

இதற்கான பூர்வாங்க வேலைகள் ஆலய பரிபாலன சபையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இராஜகோபுரம் ஐம்பது அடி உயரமும் ஐந்து தளங்களைக் கொண்டதாகவும் சுமார் முப்பது லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கிறது. பிரபல சிற்பாசாரியார் அராலியூர் க. கோபாலசிங்கம் அமைக்கவிருக்கிறார்.

## மரண அறிவித்தல்கள்

### சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை

உயரப்புலம், ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை நேற்று (04.02.2001) ஞாயிற்றுக்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் ஆரோக்கியத்தின் அன்புக் கணவரும், யேசுராஜா (கனடா), ஜெயவதனி (கொழும்பு), புஸ்பநாதன் (சுவிஸ்), சாந்தகுமார் (சுவிஸ்), சுவந்தினி (கனடா), அமலதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (83758)

தகவல்:
செ.மரியதாஸ்

### குமார் நடராஜா

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது ஜேர்மனியில் வசித்து வந்தவருமாகிய குமார் நடராஜா 31.01.2001 இல ஜேர்மனியில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான குமார் - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகனும், ந.தங்கரத்தினத்தின் பாசமிகு கணவரும், வே.தவமணி (கொழும்பு), அப்பாத்துரை (லண்டன்), கு.பவளம் (கொழும்பு), அமரர் கு.பாலசிங்கம் (செல்வராஜா) ஆகியோரின் அருமைச் சகோதரரும், ந.ராஜ்குமார் (ஜேர்மனி), ஞா.ராஜ்குமாரி (சுவிஸ்), காலஞ்சென்ற செல்வன் ந.ரவிக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், வே.ஞானேஸ்வரன் (சுவிஸ்), ரா.கமலாஜினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஞா.அஜந்த், ஞா.வேணுஷா (சுவிஸ்), ரா.ரிசோக் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைப் பேரனும், மா.சிவகாமிப்பிள்ளை, மா.ஆனந்தம் ஆகியோரின் அன்பு மருமகனும், அமரர் உயர்திரு. பண்டிதர் சி.வேலுப்பிள்ளை, மா.ஐயாத்துரை (ஜேர்மனி), மா.விஸ்வலிங்கம், மா.நல்லையா (டோகா), த.தங்கபூரணம், காலஞ்சென்ற செ.அன்னபூரணம் மற்றும் மா.சண்முகநாதன் (டோகா), சி.பரமேஸ்வரி, மா.தணிகாசலம், மா.அமுதலிங்கம் (டுபாய்) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*போக்காலை வீதி,*
*இமையாணன்,*
*உடுப்பிட்டி.* (83763)

தகவல்:
ந.தங்கரத்தினம்
(மனைவி)

### ஆறுமுகம் சிஸ்சபேசன்

மஞ்சத்தடி இணுவிலை வசிப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் சிஸ்சபேசன் 02-02-2001 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் -மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், உதயகுமாரி (UK), உதயகுமார் (பிரான்ஸ்), சண்முகேஸ்வரி, ஆறுமுகதாஸ் (நீர்கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், மகேந்திரன் (UK), பிறேமினா (பிரான்ஸ்), ஆனந்தசோதி, சசிந்திராதேவி (நீர்கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சின்னமேனை, ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் கனகநாயகம், காலஞ்சென்ற திருவிளங்கம் மற்றும் விசாலாட்சி, மனோன்மணி, மீனாச்சி ஆகியோரின் சகோதரனும், ராசையா, கனகசபாபதி, ஆறுமுகம், லட்சுமிப்பிள்ளை, நாகையா (ஜேர்மனி), விஜயகுமார், சின்னம்மா, சறோஜினி, ஜெகதாம்பாள் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், சேந்தன்(UK), கோகுலன்(UK), சுதேசன்(UK), அந்துசா (பிரான்ஸ்), ஆகாஸ் (பிரான்ஸ்), கமலாசினி, சஞ்ஜீவன், பவீனா, சுஜிபன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05-02-2001) திங்கட்கிழமை பிற்பகல் 5மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மஞ்சத்தடி,*
*இணுவில்.* (83770)

தகவல்:
ஆனந்தசோதி
(மருமகன்)

## இதயத்தைச் சிலுவையால் உழுத கண்ணீர் மூன்றாம் ஆண்டு

எங்கள் இதயங்களில் 12 - 01 - 1922



இறைவன் திருமனையில் 16 - 02 - 1998

### அமரர் பர்னாந்து அந்தோனிப்பிள்ளை

பொன் விளக்கே!

மூவாண்டு முழுநிலவின் முகமே காண
முடியாது துடியாகத் துடிக்கின் றோமே!
தேனார்ந்த அன்பொழுகும் தீஞ்சொல் கேட்கத்
திசையெங்கும் அலைந்தோடித் திரிகின்றோமே!
ஓயாதே பிள்ளைகள் எம் உயர்வைக் காண
உடலெரிந்த பொன் விளக்கே! ஐயா நாங்கள்
வாயார மனமாரப் பாலை வார்த்தே
வாழ்வளிப்போம் என்றிருந்தோம் போய்விட்டீர்களே!

எங்கள் இதயங்களில் 14 - 12 - 1945



இறைவன் திருமனையில் 05 - 02 - 1998

### அமரர் அந்தோனிப்பிள்ளை தேவதாஸ்

மேலுலகில் வாழ்பவரே!

அன்னைமடிப் பஞ்சணையில் தவழ்ந்தே கொஞ்சும்
ஆனந்தங் காணாதே அழுது விம்மி
இன்னலிருள் மடியினிலே ஏங்கும் வேளை
இருகரத்தே ஏந்தியெமை அணைத்த தந்தாய்
பொன் சொரிந்து பூச்சொரிந்தே பாதம் போற்றும்
புண்ணியத்தை நாமிழந்தே புலம்ப வைத்து
மின்னலெனப் பறந்தோடி மறைந்திட்டாயே!
மேலுலகில் வாழ்பவரே மறப்போமா? நாம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*10, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.* (C/15144) *- பிள்ளைகள்.*


ராஜா தியேட்டர்
யாழ்.நகர்
இன்று முதல்
விஜயகாந்த், தேவயானி, ரகுவரன், அம்பிகா
மற்றும் பலர் நடிப்பில்
வல்லரசு
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)
(C/15058)

லஷ்சுமி இணுவில்
கடைசி வாரமாக
விஜயகாந்த்,மீனா நடித்த
வானத்தைப் போல
(கீலஸ்)
இனிய பாடல்கள் நிறைந்தது.
(83746)

நாகம்ஸ்
சுன்னாகம்
அர்ஜீன், ரம்பா, ரகுவரன், கபாலி
சுதந்திரம்
(றீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)
(C/15135)

உதயன்

## அரசு எப்படிச் சமாளிக்கப் போகிறது?

''இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான பேச்சுக்களை நடத்துவதற்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் ஏற்கனவே இணக்கம் தெரிவித்து விட்டார்கள். அரசு தனது இணக்கப்பாட்டைத் தெரிவிக்குமானால் உடனடியாகவே பேச்சுக்கானதிகதியைத் தீர்மானிக்க முடியும்.''

—இவ்வாறு இலங்கைத் தரப்புக்கு நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் எடுத்துக் கூறியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதாவது பந்து இப்போது இலங்கைத் தரப்பின் களத்தில் உள்ளது. அவர்கள் விளையாடுவதைப் பொறுத்துத்தான் அடுத்த கட்ட நகர்வு இருக்கும்.

தமது மூன்று நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு சொல்ஹெய்ம் நேற்று முன்தினம் இரவு கொழும்பிலிருந்து புறப்பட்டு விட்டார்.

அவர் ''வந்தார்; வென்றார்; சென்றார்!'' என்று கூறுவது பொருந்துமா என்பது அடுத்த கட்டச் செயற்பாடுகளில் இருந்து தெரிந்து விடும்.

தமது முதற்கட்டப் பணி திருப்தியாக முடிந்த மனநிறைவோடு சொல்ஹெய்ம் கொழும்பிலிருந்து புறப்பட்டதாகக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

அவரது முதற்கட்டப் பணிகள் திருப்தியாக முடிந்திருந்தால், இனப்பிரச்சினை விவகாரத்தில் அடுத்து வரும் நாள்களில் முக்கிய நகர்வுகள், திருப்பங்கள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கலாம்.

பேச்சுக்குப் புலிகள் தரப்பிலிருந்து சாதகமான பதில் கிடைத்து விட்டது என்றும், அரசுத் தரப்பிலிருந்துதான் திட்டவட்டமான — தெளிவான — சமிக்ஞைகள் கிடைக்க வேண்டியுள்ளன என்றும் எரிக் சொல்ஹெய்ம் கூறியதாக வெளிவந்த தகவல்கள் உண்மையானால், இது விடயத்தில் அடுத்து வரும் நகர்வு, அரசுத் தரப்புடையதாகவே இருக்கும் என்றும் எதிர்பார்க்கலாம்.

நோர்வேயின் சமாதான முன்முயற்சி ஒரு புறம் நடக்க, மறுபுறத்தில் அரசுக்குள் இருக்கும் சிங்களத் தீவிரவாதப் போக்குடைய தலைவர்கள் — குறிப்பாகப் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க போன்றோர் — அண்மைக்காலமாக வெளியிட்டு வரும் கருத்துக்களுக்கு மத்தியில், பேச்சு மூலமான தீர்வுக்கு வழி செய்யும் புதிய நகர்வுகளை அரசுத் தரப்பால் மேற்கொள்ள முடியுமா—வெளியிட முடியுமா — என்பது கேள்விக் குறியே.

'சாண் ஏற முழம் சறுக்குவது' போல நோர்வேயின் சமாதான முன்முயற்சி சற்று முன்நகர, பிரதமர் போன்ற அரசில் உள்ள சிங்களத் தீவிரவாதத் தலைவர்கள் அந்த முன்நகர்வை இழுத்து விழுத்துவார்களோ என்ற அச்சம் பரவலாக — எல்லாத் தரப்புகளிடமும் - உள்ளது

பேச்சு மூலம் தீர்வு காண்பதில் உள்ள இந்தத் தடையை அரசு எப்படிச் சமாளிக்கப் போகின்றது? உள்ளிருந்து குழிபறிக்கும் சக்திகளை அரசுக்குள்ளேயே வளர்த்தெடுத்திருக்கும் ஜனாதிபதி, அவற்றுக்கு எப்படி ஈடுகொடுக்கப் போகின்றார்? அடுத்து வரும் தினங்களில் அல்லது வாரங்களில் இக்கேள்விகளுக்குப் பெரும்பாலும் விடை கிடைத்து விடும் என எதிர்பார்க்கலாம்

சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பம் இது. அதனை நழுவ விடுவதற்கு அரசு நினைக்கக் கூடாது.

உரிய முறையில் பயன்படுத்தி பிரச்சினைக்குத்தீர்வுகாண முயல வேண்டும்.

# தமிழுக்கு சர்வதேச பார்வை அளித்த பெருமையும் சண்முகதாஸை சாரும்

## மணிவிழாவில் துணைவேந்தர் பாராட்டு

யாழ்ப்பாணம், பெப். 5

பேராசிரியர் சண்முகதாஸின் தமிழ்ப் பணி மிக உயர்ந்தது. தமது ஆசிரியர்களின் வழியில் அவர் தமிழ் வளர்ச்சிக்கு ஒப்பற்ற சேவையாற்றி வருகிறார். தமிழ் மொழிக்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் அவர் சர்வதேசப் பார்வையையும் பெற்றுக்கொடுத்துள்ளார். இது அவருக்கு மட்டுமன்றி எமது பிரதேசத்துக்கும் பெருமை தருவதாகும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

பேராசிரியர் சண்முகதாஸின் மணிவிழா நேற்றுப் பிற்பகல் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெற்றவேளை அதில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

விழாவுக்கு தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி தி. கமலநாதன் தலைமை வகித்தார்.

துணை வேந்தர் தமது வாழ்த்துரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு பல்கலைக்கழக பேராசிரியருக்கு இருக்க வேண்டிய கல்வி, கற்பித்தல், ஆராய்ச்சிப் பணிகளுடன் சமுதாயப் பணிகளிலும் முழுமையாக உழைத்து வருகிறார்.

கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிகளுடன் நின்று விட்டால் சமுதாய அந்தஸ்து ஒருவருக்கு கிடைக்காது. சமுதாயத்துடன் இணைந்து அதன் முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டும்; அதன் நன்மை தீமைகளில் பங்கு பற்ற வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகளை பேராசிரியர் சண்முகதாஸ் கொண்டிருந்தமையால் சமுதாயத்திலும் பலராலும் அறியப்பட்டவராக அவர் இருக்கிறார். இவரது ஆசிரியர்களான பேராசிரியர்கள் வித்தியானந்தன், கணபதிப்பிள்ளை, கைலாசபதி, செல்வநாயகம் சமுதாயத்துடன் நெருக்கமாக இருந்து பெரும் பணியாற்றியவர்கள். அவர்கள் வழியில் பேராசிரியர் சண்முகதாஸும் மக்கள் சேவையில் ஈடுபடுகிறார்.

பேராசிரியரின் தமிழ்ப் பணி இந்த நாட்டுடன் மட்டும் நிற்கவில்லை. இந்தியா, பங்களாதேஷ், ஜப்பான், ரஷ்யா, ஜேர்மனி, நைஜீரியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்று அவர் சர்வதேச பார்வையைப் பெற்றுத் தருகிறார் —என்றார்.

### பேராயர்

தென்னிந்திய திருச்சபையின் பேராயர் எஸ். ஜெபநேசன் தமது ஆசியுரையில் தெரிவித்ததாவது:-

காய்தல் உவத்தல் இன்றி எல்லாச் சமயங்களையும் அரவணைக்கும் பண்பு கொண்டவர்.

பேராசிரியர் சண்முகதாஸ் வாலிப பருவத்தில் இருந்தே ஆடல், பாடல், சொற்பொழிவுகளில் சிறந்து விளங்கியவர்.

தன்னிகரில்லாத் தலைவனும் தன்னிகரில்லாத் தலைவியும் ஒன்று சேர்ந்திருப்பது, தமிழுக்காகச் சேர்ந்து உழைப்பது அதற்கு மேலும் பெருமையைச் சேர்க்கிறது. வாழ்க்கையில் வெறுப்போ, மறுப்போ அவரிடம் கிடையாது. எப்பொழுதும் சிரித்த முகத்துடனும் குதூகலத்துடனும் அவர் காணப்படுவார் — என்றார்.

### ஆதீன முதல்வர்

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருளாசியுரை வழங்கும் போது கூறியதாவது

பேராசிரியரின் மணிவிழா தமிழுக்கும் சமயத்துக்கும் இனத்துக்கும் மட்டுமல்ல சகல கலைகளுக்கும் எடுக்கப்படும் மணிவிழாவாக அமைகிறது.

குடும்ப வாழ்க்கையில் நிறைவு கண்ட பேராசிரியர் சண்முகதாஸ் உலகியல் வாழ்விலும் நிறைவு காணவேண்டும்.

கணவனும் மனைவியும் ஒரே மேடையில் பேசுகின்ற காட்சி அல்லது ஒரே நாளில் வேறுவேறு மேடைகளில் இருவரும் பேசுகின்ற காட்சியை பேராசிரியரின் குடும்பத்தில் மட்டும் காண முடிகிறது.

அவருடைய பணிகளை, செயற்பாடுகளை வார்த்தைகளினால் அளவிட்டுக்கூற முடியாது. கல்விப்பணிகளில் மட்டுமல்ல சமுதாயப் பணிகளிலும் அவர் முன்னின்று உழைத்து வருகின்றார் — என்றார்.

### சங்கத்தமிழ் வாரி

அருளாசி வழங்கிய யாழ். மாவட்ட இந்து சமயப் பேரவையின் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர் பேரவையின் சார்பில் பேராசிரியர் சண்முகதாஸிற்கு 'சங்கத்தமிழ் வாரி' என்ற பட்டத்தை வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

யாழ். மேலதிக கல்விப் பணிப்பாளர் கலாநிதி. ந. தணிகாசலம்பிள்ளை உரையாற்றும் போது கூறியதாவது—

ஆசிரிய வாண்மை விருத்திக்கு பேராசிரியர் பெரும் உதவிகளைப் புரிந்துள்ளார். எத்தனையோ பிரச்சினைகளின் மத்தியிலும் அவர் யாழ். மண்ணில் பற்றுடன் கடமை ஆற்றி வருகிறார்.

தமிழ் மொழிக்கு அவரும் அவரது பாரியாரும் இணைந்து தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும்—என்று தெரிவித்தார்.

யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதனும் பேராசிரியரை வாழ்த்திப் பேசினார்.

### 'செந்தமிழ்த் திலகம்' விருது

மணிவிழா அமைப்பு குழுவினால் வழங்கப்பட்ட ''செந்தமிழ்த்திலகம்'' என்னும் விருதினை பிரம்ம ஸ்ரீ வீரமணி ஐயா வாழ்த்துப்பா பாடி வழங்கினார்.

விருது வழங்கலைத் தொடர்ந்து சபையோர்பேராசிரியர் சண்முகதாஸையும் அவரது பாரியாரையும் மலர் மாலைகள் அணிவித்தும் பொன்னாடைகள் போர்த்தியும் கௌரவித்தனர். பலராலும் வாழ்த்துப் பத்திரங்களும் பாடி அளிக்கப்பட்டன.

கௌரவிப்பு நிகழ்வினைத் தொடர்ந்து 'சண்முக தரிசனம்', 'சண்முக தரிசனம் மணி விழா மலர்' ஆகிய இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன. (அ-5)

# தென்மராட்சி ஆசிரியர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப். 5

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழு ஒன்று தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசாவை நாளை செவ்வாய்க்கிழமை சந்திக்கவிருக்கின்றது.

சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த. பஞ்சலிங்கம் தலைமையிலான இந்தக் குழு தென்மராட்சிப் பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துப் பணிப்பாளருக்கு எடுத்து விளக்கவிருக்கின்றது என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம் —

தென்மராட்சி ஆசிரியர்கள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான விவரங்களைச் சங்கத்தின் தென்மராட்சிக் கிளையின் செயலாளர் க. தேவநேசன், பொருளாளர் ச. லிசன், யாழ். மாவட்டப் பொருளாளர் எஸ். கணேசமூர்த்தி ஆகியோரிடம் அன்று காலை 10 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி பஞ்சலிங்கம் கேட்டுள்ளார். (உ-3)

# உதவிப்பணம் கொடுப்பனவு

காரைநகர், பெப். 5

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான - ஜனவரி மாதத்திற்கான —உதவிப் பணம் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுச் சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி ஆர். கந்தப்பா தெரிவித்துள்ளார்.

தபால் சேவையில் ஏற்பட்ட தடங்கல் காரணமாகவே கடந்த மாதம் உதவிப் பணம் வழங்குவது தாமதமடைந்ததாகவும்—

அடுத்த மாதம் தொடக்கம் அம்மாதத்தின் உதவிப் பணத்தை 5ஆம் திகதிக்கு முன்னர் தபாலகங்களில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்— அவர் தெரிவித்தார். (உ-73)

# யாழ்., கிழக்குப் பல்கலைகளுக்கு எதிராக அரசாங்கம் விஷமப் பிரசாரம்

## கிழக்கிலிருந்து அறிக்கை

மட்டக்களப்பு, பெப். 5

தமிழ் மாணவர்களின் உயர்கல்வியைத் திட்டமிட்டு ஒழிக்கும் வகையில் கிழக்கிலங்கை மற்றும் யாழ். பல்கலைக் கழகங்கள் தொடர்பாக அரசு விஷமப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது என்று கிழக்கிலங்கை பல்கலைக்கழகச் சமூகம் தெரிவித்துள்ளது.

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழக சமூகம் ஏற்பாடு செய்துள்ள — ஒரு லட்சம் கையொப்பம் பெறும் — போராட்டம் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் விடுதலைப் புலிகளைத் தடை செய்யக் கூடாது என்று கோரியும்—

தமிழ்மக்களின் அபிலாஷை சுயநிர்ணய உரிமையே என்பதை வலியுறுத்தியும் —

இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாமும் யாழ். பல்கலைக்கழக சமூகமும் முன்னெடுத்துள்ள போராட்டங்களுக்கு எதிராக அரசாங்கம் விஷமப்பிரசாரங்களை மேற் கொண்டு வருகின்றது. வடக்கு—கிழக்குத் தமிழ் மாணவர்களின் உயர் கல்வியை திட்டமிட்டுத் தடுக்கும் வகையிலேயே அரசு இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவியேற்ற சமயம், தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளை ஏற்றே, அவர்களுடன் பேச்சுக்களை நடத்தியது. ஆனால் இன்று அவர்களைப் பயங்கரவாதிகள் என அழைக்கின்றது.

இது அரசின் கொள்கையில் ஸ்திரமின்மையையே காட்டுகின்றது—என்றுள்ளது.

## நாளை

தை 24

செவ்வாய்க்கிழமை

திதி: திரயோதசி

மாலை 6. 17 வரை.

நட்சத்திரம்: புனர்பூசம்

நள்ளிரவு 11. 59 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 11.05 — 12.35

ராகுகாலம்: 3.35—5.05

(பகலுக்கும் இரவுக்கும்)

பழைய நேரப்படி.

## உதயவாக்கு

உற்சாகத்தை இழப்பதும் ஒரு வகையில் மரணம் தான். தோற்கடிக்கப்படுவதற்கு முன்பே தோல்வியை ஒப்புக்கொள்வது போன்றது அது.

# கடன் உதவி வழங்கத் திட்டம்

காரைநகர், பெப். 5

ஊர்காவற்றுறைப் பகுதி மக்களின் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் மக்கள் வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை கடன் வசதிகளை வழங்க உள்ளது.

முப்பதாயிரம் ரூபா வரை இந்தக் கடன் தொகை வழங்கப்பட உள்ளதாகவும் —

இந்தக் கடனைப் பெறுவோருக்கு அரச உத்தியோகத்தர் ஒருவர் பிணை நிற்க வேண்டும் எனவும் —

மக்கள் வங்கியின் ஊர்காவற்றுறை முகாமையாளர் கோ. சற்குணபாலன் தெரிவித்தார். (உ)

## 9 ஆவது ஆண்டு நினைவுதினம்



மலர்வு 04 — 05 — 1915

உதிர்வு 17 — 01 — 1992

### அமரர் P. M. இராசரத்தினம்

(முன்னாள் காணிப்பதிவாளரும், மேலதிக மாவட்டப் பதிவாளரும்; தாவடி–ஸ்ரீசத்தியசாயி சேவாநிலைய ஸ்தாபகர்)

திதி: பூர்வபக்க துவாதசி 5 – 2 – 2001

''ஒருவன் நல்ல பிறவிக்கு ஆசைப்படக் கூடாது. நல்ல சாவைத்தான் அவன் தேடவேண்டும். பிறந்திருக்கும் ஒவ்வொருவரும் முடிவை எப்பொழுதும் கருத்தில் இருத்தல் வேண்டும் அந்தமுடிவை நல்லதாகச் செய்ய நல்ல எண்ணங்கள், நல்ல செய்கைகளைப் பழக்கத்திற்குக் கொண்டுவரவேண்டும். இத்தகைய நல்லமுடிவை எய்தினால் அது இறைவனின் திருவருளை அடைந்துவிட்டதற்குரிய அடையாளமாகும்.''

-பாபா-

— கீதாவாஹினி,

திருமதி மகேஸ்வரி இராசரத்தினம்,
(மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பிள்ளையார் கோயிலடி,
தாவடி.

(83741)

## முதலாவது சிராரத்த நாள் நினைவஞ்சலி



### திருமதி தெய்வானை வல்லிபுரம்

தோற்றம்: 04 - 01 - 1928

மறைவு: 18 - 01 - 2000

திதி: துவாதசி

சிராரத்த நாள்: 05-02-2001 (திங்கட்கிழமை)

ஆண்டொன்று கனவுபோல் அகன்றோடி
மறைந்ததம்மா!
அமைதிபொழி நின்முகம் அனைவரதும்
மனத்திரையில்
மீண்டொருகால் எம் குடியில் விரும்பி வந்து
உதித்திடம்மா!
மிகுதுயரை ஆற்றுதற்கு வேறுவழி அறியோமிங்கே

அன்புடையீர்,

இன்று [05 - 02 - 2001] திங்கட்கிழமை நிகழவிருக்கும் மதிய போசன நிகழ்விற் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

வ. சிவலிங்கம்
(மகன்)

குருக்கட்டு,
கரணவாய்,
கரவெட்டி.

(83738)

# மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தும் பலருக்கு ஊக்குவிப்புப்படி இல்லை

## அரச ஊழியர்கள் ஏமாற்றம்

சண்டிலிப்பாய், பெப் 5

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெற்ற அரச அலுவலர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்த பல அரச அலுவலர்களுக்கு இதுவரை ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ் சுகாதாரத் திணைக்களம் உட்பட மற்றும் சில திணைக்களங்களில் கடமையாற்றி வரும் அலுவலர்கள் தாம் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் தேர்ச்சி பெற்றுள்ளதாகத் தெரிவித்து அதற்கான சான்றிதழுடன் மேலிடத்திற்கு விண்ணப்பம் அனுப்பியிருந்தனர். ஒரு வருடகாலமாகியும் இதற்கான கொடுப்பனவோ அல்லது பதிலோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. விண்ணப்பித்த சிலருக்கு அத்தாட்சிப்படுத்தப்பட்ட சான்றிதழை அனுப்பி வைக்குமாறு வடக்கு — கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அறிவித்திருந்தார். அதற்கிணங்க சிரமப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட சான்றிதழைப் பெற்று அனுப்பி வைத்து பல மாத காலமாகியும் இக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 5

இணுவில் சிதம்பரேஸ்வர சிவநாச்சியம்பா ஆலயத்தின் எழுந்தருளி மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை தைப்பூசமன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-10)

## மட்டுவில் பாடசாலைக் கட்டடம் சேதம்

தென்மராட்சி, பெப். 5

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தின் அதிபரின் அலுவலகம் உள்ள இருமாடிக் கட்டடம் தவிர்ந்த ஏனைய கட்டடங்கள் அனைத்தும் பலத்த சேதங்களுக்கு இலக்காகிக் காணப்படுவதாக அங்கு சென்று திரும்பிய கிராம அலுவலர் தெரிவித்தார்.

வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வு கூடம், நூல் நிலையம், அரங்கு உட்பட அனைத்துக் கட்டடங்களும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

(ஐ-31-117)

## ஆசிரியர் செயலமர்வு

தென்மராட்சி, பெப். 5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 8, 11 ஆகிய வகுப்புகளில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், வரலாறும் சமூகக்கல்வியும் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்த செயலமர்வுகளின் தொடர் நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## வள்ளலார் பெருவிழா

தென்மராட்சி, பெப். 5

சாவகச்சேரி வித்தகத்தினரால் அருட்பெரும் சோதி வள்ளலார் பெருவிழா எதிர்வரும் புதன்கிழமை அல்வாய் மாலுசந்தி சாயி தீப மண்டபத்தில் நடத்தப்பட உள்ளது.

நிகழ்வில் திருமுறைப் பாராயணம், அருளுரைகள், ஆசியுரைகள், தெய்வீக இசைவிருந்து, சாயி பஜனை ஆகியவை இடம்பெறுமென வித்தக அருட்குருவும் வித்தக அன்பர்களும் அறிவித்துள்ளனர். (ஐ-117-173)

### வேலணைப் பிரதேசத்தில் இயங்கும்

## பாலர் பாடசாலை ஆசிரியருக்கு மாதாந்தப் படி வழங்க முடிவு

வேலணை, பெப். 5

வேலணைப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சனசமூக நிலையங்களினால் நடத்தப்படும் பாலர் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக மாதாந்தம் 500 ரூபாவை சபை நிதியிலிருந்து வழங்குவதற்குப் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்திலேயே பிரதேச சபைத் தலைவரால் மேற்படி பிரேரணை கொண்டு வரப்பட்டு சபையோரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இப் பிரேரணையினை சபையில் சமர்ப்பித்து பிரதேச சபைத் தலைவர் ந கருணாகரகுருமூர்த்தி தெரிவித்ததாவது:-

எமது பிரதேசத்தில் சில பாலர் பாடசாலைகளில் குறைந்த எண்ணிக்கையான சிறார்களே கல்வி பயில்கின்றனர். இவர்களுக்கென ஓர் ஆசிரியர் கல்வி கற்பிக்கும்போது ஆசிரியருக்கு கிடைக்கும் வருமானம் மிகவும் சொற்பமேயாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இப் பாலர் பாடசாலைகள் இடைநிறுத்தப்படுவதும் உண்டு. எனவே தான் நாம் ஊக்குவிப்புத் தொகையாக மாதாந்தம் 500 ரூபாவை வழங்கினால் ஒரு பிள்ளை பாடசாலைக்குவந்தாலும் கற்பிக்க வேண்டிய அவசியம் ஆசிரியருக்கு ஏற்படும்.

எமது பகுதிச் சிறார்களின் ஆரம்பக் கல்வி அறிவினை வளர்க்கும் நோக்குடனேயே நாம் இவ்வாறு ஊக்குவிப்புத் தொகை வழங்க முடிவெடுத்துள்ளோம். அத்தோடு சிறப்பாக இயங்கும் பாலர் பாடசாலைகளுக்கு மேலும் பல உதவிகள் செய்வதற்குத் திட்டம் வகுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அன்று நடைபெற்ற மாதத்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன:-

வேலணை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய பிரதேசங்களின் எல்லைப் பகுதியில் வரவேற்பு வளைவுகள் நிறுவுதல்

வீதிகளுக்குப்பெயர்ப்பலகை இடல்.

வேலணை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகள் உட்பட்ட சகல மாடுகளுக்கும் குறி சுடுதல். (ஐ—167)

## தீவக வலயத்துக்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சேர்ப்பு

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்ற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் ஜி.சி.ஈ சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி பெற்று ஆறுபாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சையிலும் சித்தியடைந்திருக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக தமக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (ம—7)

## வாழ்த்து அட்டை தயாரிக்கும் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 5

சாரணீய சிந்தனை நாள் வாழ்த்து அட்டை தயாரிக்கும் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஐ)


## இசை, நடனம் கற்பிக்கத் தகுதியான ஆசிரியர்கள் தேவை

நெடுந்தீவுக் கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றுவதற்காக இசை,, நடனத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளம்:= மாதம் 4000/=

தங்குமிட வசதி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 15-02-2001

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-

தலைவர், கனடா மக்கள் ஒன்றியம், நெடுந்தீவு

கனடா மக்கள் ஒன்றியம்


நெடுந்தீவு.

(83752)

## கல்விச்சாலைக் காட்சிகள்



திருநெல்வேலி றோ.க.த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் அண்மையில் நடைபெற்றன. லயன் பரமசிவம் மங்கள விளக்கேற்றுவதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நல்லூர் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா தம்பதிகளையும் பாடசாலை அதிபர் திருமதி க.கணேசமூர்த்தி ஆகியோரையும் படத்தில் காணலாம். (ஐ-10)



யாழ்.திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் புதிதாகக் கட்டப்பட்ட முன்மாதிரி வகுப்பறைக் கட்டடத்தை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எஸ்.மகாலிங்கம் நாடாவை வெட்டித் திறந்து வைத்த போது எடுத்த படம். அதிபர் கே.ஜெயானந்தனும் அருகில் உள்ளார். (ஐ-3)




5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்-மாவட்டத்திலேயே அதிகூடிய புள்ளியை பெற்ற மாணவன் செல்வன் புஸ்பராசா சிவரூபனுக்கு வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் த.தவேந்திரராசா பாராட்டுப் பத்திரம் வழங்கிய போது எடுக்கப்பட்ட படம்.

நடராசா வள்ளியம்மாள் கல்வி ஊக்குவிப்பு நிதியத்தினால் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொற்கிழியும் வழங்கப்பட்டது. (ஐ-185)

## சமயக் கருத்தரங்கு

சண்டிலிப்பாய்,பெப்.5

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான சமயக் கருத்தரங்கு எதிர்வரும் 9 ஆம் திக்தி வெள்ளிக்கிழமை நண்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா 'எதிர்காலத்தில் விஞ்ஞானமும் மெய்ஞானமும்' என்ற தலைப்பில் உரையாற்றுவார். கல்லூரி அதிபர் என்.சிவகடாட்சம் தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெறும். (ஐ-135)

## விவசாய அலகு கட்டடம் அமைப்பு

சண்டிலிப்பாய்,பெப்.5

இளவாலை புனித ஹென்றியரசர் (சேன்.ஹென்றீஸ்) கல்லூரியில் மூன்று லட்சம் ரூபா செலவில் விவசாய அலகுக் கட்டடம் நிறுவப்பட்டுள்ளது. சேதமடைந்த நிலையிலிருந்த செயற்பாட்டு அறை சுமார் நாலரை லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச செய்யப்பட்டுள்ளது. கல்வித் திணைகளம் வழங்கிய நிதியைக் கொண்டு இச் செயற்பாட்டு அறை புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் அருட் திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்தார். (ஐ-135)

## திருப்பாவை மனனப் போட்டியில் சித்தி பெற்றோர்

யாழ்ப்பாணம்,பெப்.5

வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய அறங்காவற் குழுவினரால் அண்மையில் நடத்தப்பட்ட திருப்பாவை மனனப் போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர்கள் வருமாறு:-

**கீழ்பிரிவு**

1.த.இந்திகா 2.சு.சுகிர்தா
3.க.கஸ்தூரி

**மத்தியபிரிவு**

1.த.திருவாழ்மார்பன் 2.ச.கேதீஸ்வரி
3.இ.மேரிஜெஸ்மினா

**மேற்பரிவு**

1.ப.சைந்தவி 2.ந.ரஞ்சித்பாலன்
3.க.அருள்குமரன்,சு.சசிகுமார.(க-10)

## சைக்கிள் திருட்டு

சண்டிலிப்பாய்,பெப்.5

பண்டதரிப்பு சந்திக்குச் சமீபமாகவுள்ள வீடு ஒன்றில் நள்ளிரவு வேளையில் இரு சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன. இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது. ஒரு லேடீஸ் லுமாலா சைக்கிளும் ஆண்கள் சைக்கிள் ஒன்றுமே இவ்வாறு திருடப்பட்டுள்ளன. இத் திருட்டுச் சம்பவம் குறித்து வீட்டு உரிமையாளர் இளவாலை பொலீஸ நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ-135)

## புதிய வகுப்பறை கட்டடம்

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்ட 2 லட்சம் ரூபா நிதியுதவி மூலம் வகுப்பறைக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

வகுப்பறை பற்றாக்குறையை அடுத்து இந்நிதி மூலம் பாடசாலையின் வட பகுதியில் 960 சதுர அடி பரப்புக் கொண்ட வகுப்பறைக்கட்டடம அமைக்கப்பட்டு, சங்கீத, நடன மாணவர்களின் பாவனைக்காக விடப்பட்டுள்ளது. (க-72)

யேசு, மரி சூசை துணை

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் 2001 ஆம் ஆண்டு மாசி மாதம் 7ஆம் திக்தி புதன்கிழமை காலை 10.05 மணி தொடக்கம் 11.10 மணிவரையுள்ள சுபவேளையில் கஸ்தூரியார் வீதியில் அமைந்திருக்கும் புனித ஆரோக்கிய அன்னை தேவாலயத்தில்

**செ.ரவிச்சந்திரன்** B. Com. (Hons)
நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
(ஆசிரியர்)
அவர்களுக்கும்

**அ.நிர்மலாதேவி** B.A
யா/கலட்டி மெ.மி.த.கலவன் பாடசாலை
(ஆசிரியர்)
அவர்களுக்கும்

மெய்விவாகத் திருச்சடங்கு நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை நாடும்**

திருமதி ந.செல்லத்துரை
திரு.செ.செல்வச்சந்திரன்
திரு.செ.பாலா
திரு.செ.தேவா.
*நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்.*

திரு.திருமதி அமிர்தநாதன்
திரு.அ.மரியநாயகம்
திரு.ஆ.அன்ரன்போல்
குடும்பத்தினர்
*185.A கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (83589)

(இரு வீட்டார் அழைப்பு)
(தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்)

## வாசகர் திருமுகம்

### குஜராத்தும் குடாநாடும்

இந்தியாவில் உண்டான குஜராத் பூமியதிர்ச்சிப் பாதிப்புக்கு யாழ். இந்து சமயப் பேரவை ஒரு லட்சம் ரூபா நிதியுதவி வழங்கியமை பற்றிய செய்தியை உதயனில் வாசித்தோம்.

குஜராத் மாநில மக்களின் பாரிய இழப்பை உணர்ந்து, தமிழ் மக்களின் அநுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்த பேரவையின் செயல் பாராட்டுக்குரியதே.

பாதிப்புற்று, அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவது தார்மீகக் கடமையே. எனினும், காலத்திற்குக் காலம் பல்வேறு வகைகளிலும் பாதிப்புற்று, உணவு, உடை, உறையுள் இன்றி, அகதிமுகாமே தஞ்சமாக பாதுகாப்பு இன்றி வாழ்கின்ற எத்தனையோ குடும்பங்கள் எமது பிரதேசத்திலேயே உள்ளனவே.

பாதிப்புற்ற இந்த மக்களுக்கு உதவுவதில் இந்து சமய சபைகள் எத்தகைய பங்களிப்பை வழங்கியுள்ளன? வாழ வழியற்ற எத்தனையோ இந்துக் குடும்பங்கள் மதம் மாறுவதற்குக் கூட இதுவே அடிப்படையல்லவா? வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் உதவிகள் கூட உரிய வகையில் கிடைக்காது இருக்கும் இந்நிலையில், உள்ளூர் நிறுவனங்கள் தம்மால் இயன்றதை முதலில் தம் சொந்த சகோதரர்களுக்கு செய்யலாமே.

குஜராத் பூகம்பப் பாதிப்புக்கு உலக நாடுகள் எல்லாம் உதவ முன் வந்திருக்கின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து கிடைக்கும் சொற்பம் பெரிதாக இருக்கப் போவதில்லை. ஆனால் அதுவே எமது பிரதேசத்துக்கு உயிர் காக்கும் சஞ்சீவியாக பயன்படக் கூடுமல்லவா?

சோதனையே வாழ்க்கையாகப் பழக்கப்பட்ட தமிழன் ஒரு போதும் இன்னொருவனுக்கு உதவுவதைத் தடுக்க மாட்டான். ஆனாலும், செய்ய முனைபவர்கள் முதலில் தமது இருப்பின் தேவையை உணர வேண்டும். தன் வயிற்றில் ஈரத் துணி சுற்றிக் கொண்டு போலித்தனமாய் செய்கின்ற தானம் தொடரத்தான் வேண்டுமா?

*யாழ்ப்பாணம்* - **திருமதி.ஆ.சாமி**

### மரண விசாரணை நடத்தப்பட்டது குறித்து பணிப்பாளர் விளக்கம்

கடந்த 30 ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் 'வாசகர் திருமுகம்' பகுதியில் "இறந்தவரின் சடலத்தைப் பெறுவதற்காக அலைந்து திரிந்து படாத பாடுபட்ட" என்னும் தலைப்பில் மானிப்பாயைச் சேர்ந்த இ.சாந்த கிருஷ்ணன் என்பவரால் எழுதப்பட்டதாக பிரசுரிக்கப்பட்டிருக்கும் விடயம் சம்பந்தமாக யாழ்.வைத்தியசாலையிலுள்ள பதிவேடுகளின்படி பின்வரும் விளக்கத்தை அனுப்பி வைக்கிறோம்.

ந.நாகேந்திரம் என்பவர் தெல்லிப்பழை வைத்தியசாலை அம்புலன்ஸ் மூலமாகக் கொண்டு வரப்பட்டு 2000-12-09 ஆம் திகதி நள்ளிரவு 12.05 மணிக்கு இவ்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு காலை 8.45 மணிக்கு இறந்துள்ளார். திரு. சாந்தகிருஷ்ணனின் அபிப்பிராயப்படி இந்த நோயாளி இவ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 24 மணித்தியாலத்திற்குள் இறந்தமையால்தான் மரண விசாரணைக்கு ஒழுங்கு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இவருடைய வாதம் பிழையான வாதம்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளிகள் அனுமதிக்கப்பட்ட 24 மணித்தியாலத்தில் இறந்தால், அப்படியான சகலருக்கும் மரணவிசாரணை வைக்க வேண்டுமென்று கட்டாயமில்லை. நோயாளியைப் பார்வையிட்ட வைத்தியர் நோயாளி இறந்ததற்கான காரணத்தை கண்டுபிடிக்கும் சந்தர்ப்பங்களில் மரண விசாரணைக்கு ஒழுங்கு செய்வதில்லை.

சம்பந்தப்பட்ட நோயாளி வயிற்றுப்போக்கு மற்றும் சிறுநீர் செல்ல மறுத்தல் போன்ற நோய்களால் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக இவர் கூறியுள்ளார். தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து இங்கு மாற்றம் செய்யப்பட்ட நோயாளிக்கு 10 நாள்கள் காய்ச்சல், சலக்கடுப்பு, இருமல், மூச்சுவிடக் கஷ்டம் ஆகிய அறிகுறிகள் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நோயாளியைப் பார்வையிட்ட இவ் வைத்தியசாலை வைத்தியர் இரத்தச்சோகை, கடுமையான பலவீனம், மூச்சு விடக்கஷ்டம், கால்வீக்கம், நுரையீரல் பாதிப்பு ஆகிய அறிகுறிகள் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இவருக்கு ஏற்பட்டிருந்த உண்மையான வருத்தத்தை இவர் இறப்பதற்கு முன்பு கால அவகாசம் போதாமையால் உறுதி செய்ய முடியவில்லை. நோயாளி கதைப்பதற்கு முடியாமல் இருந்துள்ளார். இவருடைய நோய் சம்பந்தமான மேலதிக தகவலைப் பெறுவதற்கு உறவினர் கூட இருக்கவில்லை. மேற்கூறிய காரணங்களுக்காகவே மரண விசாரணைக்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

நோயாளி இறந்த 24 மணித்தியாலத்துக்குள் பிரேதம் வைத்தியசாலையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது.

*அரசினர் பொது வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.* - **பணிப்பாளர்**

### சொத்துகள் சூறையாடப்படுவதை உடனடியாகத் தடுக்க வேண்டும்

நீர்வேலி தரவையூடாக கைதடி நுணாவில், மட்டுவில் மற்றும் கைதடிப் பகுதிகளுக்கு அனுமதியின்றிச் செல்பவர்கள் அங்கு வீடுகளில் உள்ள பொருள்களைச் சூறையாடி வருகின்றனர். அப்பகுதிகளைச் சேர்ந்த மக்களுடன் செல்லும் வெளியாரும் பொருள்களை அபகரித்துச் செல்கின்றனர். கடந்த ஒரு மாத காலமாக சூறையாடல் தொடர்ந்து நடந்து வருகிறது.

கடந்த சில நாள்களாக இராணுவத்தினர் பொருள்களுடன் வருபவர்களை மறித்துச் சோதனையிட்டு வருகின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் வகையாகச் சிக்கிக் கொள்ளும் திருட்டு ஆசாமிகள் அபகரித்து வந்த பொருள்களை இராணுவத்தினரிடம் பறிகொடுக்க நேரிடுகிறது. இன்னும் சிலர் படையினருக்கு டிமிக்கி கொடுத்து எடுத்து வரும் பொருள்களை 'வந்த விலைக்கு' விற்று விடுகின்றனர்.

தென்மராட்சி மக்களின் சொத்துக்கள் எல்லாம் அழிந்தது மட்டுமன்றி, எஞ்சியவையும் சூறையாடப்படுவது வேதனைக்குரியது.

கடந்த 27ஆம் திகதி, வரணி 52ஆவது பிரிவினரால் நடத்தப்பட்ட தென்மராட்சி கிராம அலுவலர்களுக்கான கூட்டத்தில் இது பற்றி பிரஸ்தாபித்து, 52 கையொப்பங்களுடன் மகஜர் ஒன்றும் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

எனினும் தென்மராட்சிப் பகுதி அரச அதிகாரிகளோ, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளோ எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இச்சந்தர்ப்பத்தில் தந்தை செல்வா அன்று கூறிய 'தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்ற வாசகமே ஞாபகத்திற்கு வருகிறது.

அரச உயர் அதிகாரிகள், படைத் தரப்பினருடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு இடம்பெயர்ந்த மக்களின் பொருள்கள் சூறையாடப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். தவறினால் தென்மராட்சி மக்கள் எஞ்சிய உடைமைகளையும் இழக்க நேரிடும் என்பதை துயரத்துடன் தெரிவிக்கின்றேன்.

*(கைதடி, நுணாவில்*
*வாழ் மக்கள் சார்பில்)* - **ம.கீர்த்திநாதன்**

## செயலிழந்து போயுள்ள

# கைத்தொழில் நிலையங்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன

யாழ்ப்பாணம்,பெப்.5

யாழ்ப்பாணம், வவுனியா,மன்னார் ஆகிய மாவட்டங்களில் இயங்கும், மூடப்பட்ட கைத்தொழில் நிலையங்கள் பற்றிய தகவல்களை வடக்கின் மீள்குடியேற்ற, புனரமைப்பு அதிகார சபை திரட்டி வருகிறது.

முன்பு இயங்கி கலவரங்கள் காரணமாக மூடப்பட்டுள்ள கைத்தொழில் நிலையங்களின் விவரங்களையும் -

தற்சமயம் இயங்கும் கைத்தொழில் நிலையங்களின் விவரங்களையும் -

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பு அனுப்புமாறு அந்தச் சபை கேட்டுள்ளது.

இந்த விவரங்களைப் பெற்று அந்த நிலையங்களை இயக்க உதவிகள் வழங்கப்படவுள்ளதாக சபை அதிகாரி தெரிவித்தார். (ஐ-3)

# அறிவித்தல்

**யாழ்.மருத்துவ சங்கத்தின் (J.M.A.) விசேட பொதுக்கூட்டம்**

எதிர்வரும் வெள்ளிக்கிழமை (09.02.2001) காலை 11.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ மாணவர் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முக்கிய விடயங்கள் கலந்து ஆலோசிக்கப்படவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

டாக்டர் சி.முகுந்தன்,
கௌரவ செயலாளர்,
யாழ்.மருத்துவ சங்கம்,

(83753)

## ஆலயத்தில் மீண்டும் பூசை

அரியாலை,பெப்.5

கொய்யாத்தோட்டம் செல்வவிநாயகர் ஆலயத்தில் சுமார் ஒன்பது மாதங்களின் பின்னர் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பித்து வைக்கப்படும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

கிரியைகள் தி.பாலசுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் இடம் பெறும்.

இந்தப் பகுதியில் மக்கள் இடம் பெயர்ந்ததை அடுத்து மேற்படி ஆலயம் பூசை வழிபாடுகள் இன்றி பூட்டப்பட்ட நிலையில் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-17)

## வணிகர் மன்றக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.5

மீசாலை கைத் தொழில் வணிகர் மன்றத்தின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கரவெட்டி கிழக்கு கிழவிதோட்ட பிள்ளையார் கோயிலில் இடம்பெறவுள்ளது.

வர்த்தகர்களின் இழப்பீடுகள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றது. (ஐ-3)

## குரு பூசை

யாழ்ப்பாணம்,பெப்.5

கைதடி தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் வருடாந்த குரு பூசை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். சத்திர ஞானவைரவர் தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு கு.கங்கைவேணியன் தலைமையில் இடம்பெறும்.

திருமதி. கு.அன்னபூரணி தலைமையில் ஆச்சிரம மாணவிகளின் பஜனையும், தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் அருள் கடாட்சம் பெற்ற அடியார்களின் சிறப்புரைகளும் இந்த நிகழ்வில் இடம் பெறும். (ஐ-3)

## சந்தைக் கட்டடத் திறப்பு விழா

வலி.வடக்கு,பெப்.5

ஆறு லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட பன்னாலை கூத்தன் சீமா சந்தைக் கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீ பாஸ்கரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கௌரவ விருந்தினராக வலி.வடக்கு பிரதேச செயலாளர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை வலி.வடக்கு பிரதேச சபை உபதலைவர் வி.சண்முகநாதனும் வாழ்த்துரையை பண்டிதர் க.நாகலிங்கம், செ.சிவபாலன், க. புண்ணியசீலன் ஆகியோரும் வழங்கவுள்ளனர். (ஐ-86)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 10 - 1931



மறைவு 18 - 01 - 2000

அமரர்

## சிவக்கொழுந்து சுந்தரலிங்கம்

*அன்பின் உருவமாய்*
*ஆசையுடன் வளர்த்தெம்மை*
*இன்பமாக வாழ்வதற்கு*
*ஈடிலா உழைத்த செம்மல்*
*உலகினில் உலாவிட*
*ஊக்குவித்த தலைமகனை*
*என்றுதான் காண்போமோ?*
*ஏங்கியே தவிக்கின்றோம்.*
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆராதிக்கின்றோம் தினமென்றும்.

*சுதுமலை தெற்கு.* மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(83706)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 - 06 - 1938



மறைவு 18 - 01 - 2000

## அமரர் நாகமுத்து இரத்தினம்

திதி: 05.02.2001

இன்முகமும் எழில்மிகு தோற்றமுமாய்
கன்னல் மொழிபேசிடும் இனிய ஐயாவே!
விட்டுச் செல்லவில்லை நீவிர்
தொட்டுச் சென்ற பாசங்கள்
ஓராண்டு ஆனாலும் – எம்
உணர்வுகளில் நிற்கும் – உம்
இனிய நினைவுகள் ஐயா!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*இராச வீதி,*
*கல்வியங்காடு,*
*யாழ்ப்பாணம்.*

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (83712)

## உணர்வுகள் தேய்ந்து உள்ளந் துடிக்கும்

# 2 ஆம் வருட நினைவுச் சிமிழ்

# 26 ஆம் வருடக் கனவு ஜனனம்



செல்வி

## சுகந்தினி சுந்தரலிங்கம்

(சமுர்த்தி உத்தியோகத்தர், உடுவில்)

மண்மகிழ 29.03.1974

கண்நெகிழ 05.02.1999

இருபத்தா றாம்வருட ஜனனதினம் வந்ததம்மா
இனியவளே உனையிழந்து இருவருடம் போனதம்மா!
பருவ எழில் பார்த்திங்கு பகற்கனவு நாம் கண்டோம்
பாசமெலாந் துறந்தின்று பரமன்தாள் சென்றிட்டாய்!
மருவினிய பைங்கிளியே! மாசற்ற சுகந்தியம்மா!
மனமுருகி இன்றைக்கும் உன்னையெண்ணி வாடுகிறோம்!
திருவிளங்கு சிவன்தாள் தீங்குயிலே நீசுகிக்க
தினமுமிங்கு மலர்தூவி அஞ்சலித்தோம் அமைதி கொள்க.

* * *

ஆண்டுகள் ஆயிரம் ஆயிரம் போயினும்
அம்மா சுகந்தி – உன்பேர்வாழும்
பூண்டிடும் அன்பு மனதினில் வாழும்
பூவை உந்தன் புகழ் வாழும்.

ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்!

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.*

(83735)

அன்பு அப்பா, அம்மா,
உடன் பிறப்புக்கள்,
உறவினர்கள்.

# பிறந்த நாள் நினைவுகளில்

பிறப்பு 06 - 02 - 1957



இறப்பு 11 - 02 - 1967

பிறப்பு 04 - 02 - 1967



அநியாய அழிப்பு 21 - 10 - 1987

## செல்வன் பெலிசியன் மனோகரன்

(பழைய மாணவன், சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

## செல்வி நோயலா விஜயந்தி

(பழைய மாணவி, யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலை)

ஒன்றாக இருந்து உண்டோம் களித்தோம்
வண்டாக பறந்து திரிந்தோம் படித்தோம் – மலர்ச்
செண்டாக சேர்ந்து இருந்தோம் சிரித்தோம் – இன்று
துண்டாக பிரிந்து துவள்கிறோம் துன்புறுகிறோம்.

பிறந்த நன்னாளை நினைந்து மனதுருகி
இறைபதம் இறைஞ்சுகிறோம்.

*'வஸ்தியன்ஸ்'*
*364, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(C/15147)

சகோதரர், சகோதரிகளின் குடும்பத்தினரும்
உறவினர், நண்பர்களும்.

# பூமி அதிர்ச்சிக்கான அறிகுறிகள்: தற்காப்புக்கு உதவுமா?

**அண்மையில் இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் இடம்பெற்ற பூமியதிர்ச்சியினால் பல்லாயிரக்கணக்கானோர் பலியாயினர். இதற்கு முன்னரும் உலகின் பல்வேறு பகுதிகளில் இவ்வாறான கொடிய பூமியதிர்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.**

**பூமியதிர்ச்சி ஏன் ஏற்படுகின்றது? அது குறித்து நேர காலத்துடன் அறிந்து கொள்ள முடியாதா? என்பன குறித்து ஆராய்கிறது இக்கட்டுரை.**

இயற்கை வளங்கள் மனித வாழ்வுக்கு எவ்வாறு இன்றியமையாதனவோ அவ்வாறே இயற்கை அனர்த்தங்கள் மிகவும் கொடுமையானவை. எரிமலை, ஆற்றுப்பெருக்கு, காட்டுத்தீ, புயல், பூமியதிர்ச்சி ஆகிய இயற்கை அனர்த்தங்கள் மனித வாழ்வைப் பெருமளவில் பாதிப்பினும் இவற்றுள் பூமியதிர்ச்சி மிகவும் கொடியது. ஏனைய இயற்கை அனர்த்தங்களை விஞ்ஞானிகள் முனகூட்டியே அறிந்து கொள்வர். அனர்த்தம் இடம்பெறும் இடத்தை முன்கூட்டியே கண்டறிந்து எச்சரிக்கைகள் விடுக்கப்படுவதால் ஏனைய அனர்த்தங்களில் இருந்து மனிதன் பாதுகாப்பைத் தேட கால அவகாசம் கிடைக்கிறது. இதனால் மனிதப் பேரழிவு பெரும்பாலும் தடுக்கப்படுகிறது. ஆனால் விஞ்ஞானம் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்துள்ள நிலையிலும் பூமி அதிர்ச்சி எப்போது? எங்கே நிகழும்? என்பதை வல்லுநர் முன்கூட்டியே துல்லியமாக அறிந்து கொள்ளமுடியவில்லை. பூமியதிர்ச்சியின் தாக்கத்தை அளவிடுதல், பூமியதிர்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் ஆகியன பற்றியே இதுவரை விஞ்ஞான ரீதியாக ஆராயப்பட்டுள்ளன. இருப்பினும் மனித வாழ்வுக்கு உதவக்கூடிய நன்மைகள் இதுவரை கண்டறியப்படவில்லை என்றே கூறலாம்.

பூமியதிர்ச்சி நிகழவுள்ளது என்பது பற்றி ஒரு சில நிமிடங்களுக்கு முன்னர் கூட குறித்த பகுதியைச் சேர்ந்த மக்களால் அறிந்து கொள்ள முடியாதுள்ளது. பாதுகாப்பைத் தேட கால அவகாசம் இல்லாத காரணத்தினாலேயே மக்கள் பெருமளவில் குறிப்பாக நகர்ப்புறங்களில் மரணமடைகிறார்கள். நகர வாழ்க்கையில் மக்கள் கொண்டுள்ள மோகமும் அதனால் ஏற்படும் இட நெருககடியைத் தவிர்க்கும் நோக்கில் பல மாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதிகள் அமைக்கப்படுவதுமே பூமியதிர்ச்சி ஏற்படும் போது மக்கள் பெரும் எண்ணிக்கையில் மரணமடைவதற்கான முக்கிய காரணமாகும்.



ஓரிரு நிமிடங்களுக்குள் பல நகரங்களைத் தரைமட்டமாக்கி பல்லாயிரக்கணக்கானோரின் உயிர்களைக் காவு கொண்ட பூமியதிர்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.

### 10 லட்சம் அதிர்வுகள்

உலகில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களில் பூமியதிர்ச்சியே ஆண்டு தோறும் பெரும் எண்ணிக்கையில் இடம்பெறுகின்றன. வருடாந்தம் உலகில் சராசரியாக 10 லட்சம் வரையான பூமியதிர்ச்சிகள் ஏற்படுவதாகவும் அவற்றுள் சுமார் 100 பூமியதிர்ச்சிகள் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியன எனவும் அவற்றுள் சுமார் 10 பூமியதிர்ச்சிகள் மிகவும் கொடியன எனவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

பூமியில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பூமியதிர்ச்சி இடம்பெறினும் தகவல் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி ஏற்படாத காரணத்தினால் 20 ஆம் நூற்றாண்டு வரை பூமியின் பல்வேறு பகுதிகளில் இடமபெற்ற பூமியதிர்ச்சியின் தாக்கம் மற்றும் அழிவுகள் தொடர்பான தகவல்களை உலகிலுள்ள அனைவராலும் அறிந்து கொள்ளமுடியவில்லை.

இதுவரை உலகில் இடம்பெற்ற பூமியதிர்ச்சிகளில் 8 லட்சத்து 30 ஆயிரம் மக்களை பலிகொண்ட பூமியதிர்ச்சியே மிகவும் பயங்கரமானது எனக் கூறப்படுகிறது. சீனாவின் வடபகுதியிலுள்ள ஷென்சி **(SHENSI)** என்ற பிரதேசத்தில் இப் பூமியதிர்ச்சி 1556 ஆம் ஆண்டில் இடம்பெற்றது.

ஜப்பானின் தலைநகரான ரோக்கியோவில் 1703 டிசம்பர் 30 ஆம் திகதி ஒரு பூமியதிர்ச்சி இடமபெற்றது. அதன போது 2 லட்சம் மக்கள் கொலலப்பட்டனர். 1737 ஒக்ரோபர் 11 ஆம் திகதி இந்தியாவில் வங்காளத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 3 லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்.

1765 ஆம் ஆண்டில் நவம்பர் முதல நாள் போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பன் நகரத்தை பயங்கரப் பூமியதிர்ச்சி ஒன்று தாக்கியது. அதன்போது லிஸ்பன் நகரின் தென்பகுதி முற்றிலுமாக அழிந்தது. பூமியதிர்ச்சியைத் தொடர்ந்து அத்திலாந்திக் சமுத்திரத்திலிருந்து பாரிய அலைகள் உருவாகி வந்து அந்த நகரைத் தாக்கின. சுமார் 60 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர். அந்த நிலநடுக்கத்தின் அதிர்ச்சி 30 லட்சம் சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவில் உணரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பூமியதிர்ச்சியின் தாக்கம் மத்தியதரைக் கடலின் நுழைவாசலில் அமைந்துள்ள ஆழ்கடலையும் கடந்து வட ஆபிரிக்க நாடான மொறோக்கோவிலும் அழிவுகளை ஏற்படுத்தி உள்ளது. அன்று கல்லறைத் திருநாள். தென் ஐரோப்பிய நாடுகளில் மாதா கோயில்களில் கூடியிருந்த மக்கள், கோயில் கூரைகளில் தொங்கிய சரவிளக்குகள் குலுங்கி நடனமாடியதைக் கண்டு வியப்புற்றனர். ஆனால அவர்கள் அப்போது போர்த்துக்கலில் இடம்பெற்ற அனர்த்தம் குறித்து அறிந்திருக்கவில்லை.

### சீறும் அலைகள்

லிஸ்பன் நகரில் இடம்பெற்ற அனர்ததங்கள் மனிதனின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு பயங்கர அழுத்தங்களால் உருவாகின்றன என்பதை மேற்குலக அறிஞர்களுக்கு ஞாபகப்படுத்தின. தரையில் இடம்பெறும் பூமியதிர்ச்சியைப் போல் கடலடித் தரையிலும் பூமியதிர்ச்சிகள் இடம்பெறலாம் என்பதையும் அவை தரையில் ஏற்படும் பூமியதிர்ச்சியை விட பயங்கரமான அழிவுகளை விளைவிக்கும் என்பதையும் மேற்குலக அறிஞர்கள் அறிந்தனர். கடலடித்தரையில் நிகழும் சில அதிர்வுகளால் கடலில் நீண்ட, மென்மையான குமிழ்கள் உருவாகும். அவை கரையை ஒட்டிய ஆழமற்ற பகுதிகளை குறிப்பாக துறைமுகம் போன்ற குறுகிய நீர்ப்பகுதிகளை அடையும் போது அவை சுமார் 50-100 அடிவரை குவிந்து எழுந்து திடீரென மாபெரும் நீர்ச்சுவர்களாக விஸ்வரூபம் எடுக்கும். எதிர்பாராத இந்த நிகழ்வால் பல்லாயிரக்கணக்கானோர் பலியாக வாய்ப்புண்டு. ஜப்பானிய கரையோரப்பகுதிகளில் இவை அடிக்கடி உருவாகின்றன. இந்த அலைகளை ட்சுணாமி **(TSUNAMI)** என்ற ஜப்பானிய பெயரிலேயே அழைக்கின்றனர்.

பூமியதிர்ச்சி உருவாவதற்கு பல்வேறு காரணங்கள் தெரிவிக்கப்பட்டன. நிலத்திற்கு அடியில் சிக்கியுள்ள மாபெரும் வாயுப் படலங்கள் வெளியேற முயற்சிக்கும் போதே பூமியதிர்ச்சி உருவாகிறது என்பது ஒரு கருத்தாகவிருந்தது. நிலத்திற்கடியிலுள்ள பாறைகளுக்கிடையே வெப்பம் உருவாகும் போது அதனால் ஏற்படும் விளைவுகளே நிலநடுக்கத்திற்கான காரணம் என்பது மற்றொரு கருத்தாகும்.

தரைக்கடியிலுள்ள பாறைகளின் இடப்பெயர்ச்சியினால் உண்டாகும் அலைகளே பூமியதிர்ச்சி ஆகும் என்ற கருத்தை ஜோன் மைக்கேல் **(JOHN MICHEL)** என்ற ஆங்கிலப் புவியியலாளர் 1760 இல் வெளியிட்டார். கடலடியில் உருவாகும் பூமியதிர்ச்சி காரணமாகவே 'ட்சுணாமிகள்' உருவாகின்றன என்பதை இவரே முதன்முதலாக வெளியிட்டார்.

1855 இல் லூகி பாஸ்மியறி **(LUIGI PALMIERI)** என்ற இத்தாலிய இயற்பியலாளர் முதன் முதலில் நிலநடுக்க வரைவியை **(SEISMOGRAPH)** உருவாக்கினார். இந்த வரைவி பூமியதிர்ச்சியை மாத்திரமின்றி ஏனைய அதிர்வுகளையும் பதிவு செய்ததால் பூமியதிர்ச்சி குறித்த தரவுகளைத் துல்லியமாக அறிய முடியவில்லை.

1880 இல் அதைவிட மேலான ஒரு கருவியை ஜோன் மில்னே **(JOHN MILNE)** என்ற ஆங்கில பொறியியலாளர் கண்டுபிடித்தார். இந்தக் கருவியும் பயன்தரும் விளைவுகளை போதிய அளவு அளிக்காவிடினும் அவரின் முயற்சியால் ஜப்பானிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் பூமியதிர்ச்சி விளைவுகளை ஆராயும் நிலையங்கள் நிறுவப்பட்டன. இன்று தென்துருவத்தில் கூட பூமியதிர்ச்சி பதிவுநிலையங்கள் உள்ளன.

1970-1980 இடைப்பட்ட காலத்தில் உலகில் பெரும் எண்ணிக்கையில் பூமியதிர்ச்சிகள் இடம்பெற்றன. 27-07-1976 அன்று சீனாவில் பெய்ஜிங் நகருக்கு தெற்கேயுள்ள ஒரு நகரத்தில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி 6 லட்சத்து 50ஆயிரம் உயிர்களைப் பலிகொண்டது. அக்காலப்பகுதியில் கௌதமாலா, இத்தாலி, துருக்கி, மெக்சிக்கோ, ருமேனியா, பிலிப்பீன்ஸ் தீவுகள் போன்ற இடங்களிலும் பூமியதிர்ச்சிகள் ஏற்பட்டன. பூமியதிர்ச்சியை கண்டறியும் துறையில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பூமியதிர்ச்சி இடம்பெறுவதற்கு முன்னர் தரையிலும் காற்றிலும் உருவாகும் மாற்றங்களைக் கண்டறிவதில் விஞ்ஞானிகள் அதிக அக்கறை செலுத்திவருகின்றார்கள்.

### பூமியதிர்ச்சிக்கான சில அறிகுறிகள்

பூமியதிர்ச்சி இடம்பெறுவதற்கு முன்னர் சில இடங்களில் தரை துருத்திப் புடைத்துக் காணப்படும் பாறைகள் பிளந்து பிரியும் அல்லது ஒன்றை



ஒன்று நெருங்கும் நீர் நிலைகளிலுள்ள நீர் திடீரென வற்றும் அல்லது எதிர்பாராத இடங்களில் நீரூற்றுக்கள் உருவாகும். கிணறுகளில் திடீரென நீர் வற்றும் அல்லது திடீரென நீர் அதிகரிக்கும். கிணற்று நீர் திடீரென வற்றுவதை அல்லது திடீரென நீர் மட்டம் அதிகரிப்பதை வைத்து சாதாரண அறிவைக் கொண்டவர்களாலும் பூமியதிர்ச்சி ஏற்படவுள்ளது என்பதை ஓரளவு ஊகிக்க முடியும். மனிதர்களால் உணரமுடியாத நுண்ணிய அதிர்வுகளையும் சுற்றுச் சூழல் மாற்றங்களையும் பிராணிகள் அறிந்து பதற்றமடையும். சுவர்களில் பூசப்பட்ட வர்ணங்களில் விரிசல்கள் ஏற்படுவது போன்ற சின்னச் சின்ன விஷயங்களைக் கூடச் சீனாவில் பதிவு செய்கிறார்கள். இதனால் 4-2-1975 இல் வடகிழக்குச் சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைப் பற்றி முன்கூட்டியே எச்சரிக்கை செய்ய முடிந்தது. மக்கள் திறந்தவெளிகளில் போய்த் தங்கியதால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டன. இருப்பினும் இவை துல்லியமான மதிப்பீடுகள் அல்ல. இந்த மதிப்பீடுகள் 1976 இல் சீனாவில் இடம்பெற்ற பூமியதிர்ச்சியிலிருந்து மக்களை காப்பாற்றத் தவறிவிட்டன.

### பூமியதிர்ச்சியின் ஆற்றலை அளவிடும் முறை

பூமியதிர்ச்சியின் ஆற்றல் 0ரில் இருந்து 9 வரையுள்ள ஓர் அளவு கோலில் அளக்கப்படுகிறது. 1 என்ற வலுவுள்ள பூமியதிர்ச்சியை விட 2 என்ற வலுவுள்ள பூமியதிர்ச்சி சுமார் 31 மடங்கு வலுவுள்ளது. இதே முறையில் 9 வரையான பூமியதிர்ச்சி வலுக்கள் அளக்கப்படுகின்றன. 9க்கும் மேற்பட்ட(வலுவுக்கு) பூமியதிர்ச்சி இதுவரை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. 1996 'பெரிய வெள்ளி' தினத்தன்று அலாஸ்காவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி 8.5 வலுவுள்ளதாக இருந்தது. தற்போது நடைமுறையிலுள்ள பூமியதிர்ச்சியை அளவிடும் முறையை அமெரிக்காவைச் சேர்ந்த நிலநடுக்கம் தொடர்பான வல்லுநர் சாள்ஸ் பிரான்சிஸ் ரிச்டர் **(CHARLES FRANCIS RICHTER)** என்பவர் அதி முக்கியப்படுத்தினார். இந்த அளவு முறை அவருடைய பெயராலேயே அழைக்கப்படுகிறது.

பசுபிக் சமுத்திரத்தை அண்டியுள்ள பகுதிகளிலேயே பெரும்பாலான அதாவது சுமார் 80 சதவீதமான நிலநடுக்கம் ஏற்படுகின்றன. அமெரிக்கக் கண்டத்தின் மேற்குக்கரையில் இருந்து தொடங்கி ரஷ்யாவின் கிழக்குக் கரை வழியாக ஜப்பான், சீனா ஆகிய நாடுகளையும் கடந்து ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கரையில் வந்து இந்தப் பகுதி முடிவடைகிறது. அடுத்து மீதமுள்ள பூமியதிர்ச்சி ஆற்றல் இமயமலையில் இருந்து மத்திய தரைக் கடல்வரை நீண்டுள்ள பகுதிகளில் உருவாகின்றன. இந்த பூமியதிர்ச்சி மண்டலங்களில் எரிமலைப் பகுதிகள் அடங்குகின்றன.

**- கஜனி -**

நிலநடுக்கம் 40 முதல் 160 கி.மீற்றர் ஆழத்திலிருந்து உருவாகின்றதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். எரிமலைகள் நெருப்பைக் கக்கும் போது சில இடங்களில் பூமியதிர்ச்சி உண்டாகிறது. எரிமலைகள் உள்ள இடங்களில் ஏற்படும் பூமியதிர்ச்சி மிகவும் பயங்கரமானது.

மலைப் பாங்கான இடங்களில் இடம்பெறும் பூமியதிர்ச்சியின் போது மண் சரிவுகள் ஏற்பட்டு மனித உயிர்கள் பலியாகின்றன. அண்மையில் குஜராத்தில் இடம்பெற்ற பூமியதிர்ச்சியில இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டதற்குக் காரணம் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் நெருக்கமான கட்டடங்கள் நிறைந்த பகுதியில் மக்கள் செறிந்து வாழ்ந்தமையே ஆகும். இந்த இயற்கை அனர்த்தத்தினால் இவ்வளவு எண்ணிக்கையில் மனித உயிர்கள் பலியானதற்கு மனிதனே முக்கிய காரணமாகும்.

★

# அரும்பொருள் காட்சியகம் அமைப்பதற்கு ஏற்பாடு

வலி.வடக்கு,பெப்.5

அரும்பொருள் காட்சியகம் ஒன்றை அமைப்பதற்கு வேண்டிய முன் நடவடிக்கையை வடக்கு - கிழக்கு கல்வி, கலாசார பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இத்தகைய அரும்பொருள்களை வைத்திருப்பவர்களுடன் தொடர்பு கொண்டு உரிய பொருள்களைப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி பிரதேச செயலாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் அரும்பொருள்களைச் சேகரித்து வைத்திருப்போர் அவற்றைப் பேணுவதற்கான இடவசதி இன்றி நீண்டகாலமாக வீடுகளில் வைத்திருக்கிறார்கள். கடந்தகால இடம்பெயர்வின் போது இத்தகைய அரும்பொருள்கள் பல இழக்கப்பட்டுவிட்டன.

(ஐ-86)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வீடு மற்றும் வெற்றுக்காணிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விள. இல.1199 மே/பா உதயன். (83734)

## திருத்துதல்

மூக்குக் கண்ணாடிகள் ஒட்டுதல், சகல கமெரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஷ்கள், புகைப்படத்துறை சார்ந்த ஏனைய கருவிகள் அனைத்தும் திருத்திக் கொடுக்கப்படும். சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி (மேல்மாடி), கன்னாதிட்டிச் சந்திக்கருகில், யாழ்ப்பாணம். (83742)

## இலக்கியக் கட்டுரைகள்

10-11ஆம் தரங்களில் தமிழ் இலக்கியத்தை இலகுவாகக் கற்கவும், கற்பிக்கவும் சிறந்த நூல். சிறுகதைகள், நாடகங்கள், நாவல் எல்லாவற்றிற்கும் விளக்கங்கள் எழுதியுள்ளார், அவை எல்லாவற்றையும் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.(83570)

## புவியியல், கணித வகுப்புகள்

**G.A.Q, B.A. Part I, II.** புவியியல் வகுப்புகளும், **O/L** கணித வகுப்புகளும் நடைபெறுகின்றன. ஆசிரியர் **S.R.BALA (B.A, Hons) Geo. Spel. No 89**,சட்டநாதர் வீதி, **(N.M.A)** நல்லூர். (83756)

## தவறிவிட்டது

**2 1/2** பவுண் எடையுள்ள நீலக் கல்லுடன் **(CATSEYE)** கூடிய மோதிரம் 02.02.2001 அன்று தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் திரு. திருவரத்தினம், **171-A,** பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் விலாசத்தில் ஒப்படைத்தால் **1000/-**(ஆயிரம் ரூபா) சன்மானம் வழங்கப்படும். (83757)

## விற்பனைக்கு

யாழ்-மானிப்பாய் வீதியில் 3ஆம் கட்டை, ஆனைக்கோட்டையில் 13 பரப்பு தென்னங்காணி (நல்ல வருமானமுடையது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த.இராசரத்தினம், பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில் தெற்கு, சுன்னாகம். **(C/15139)**

பாலர் பாடசாலைக்குரிய தினவரவு இடாப்பு இப்போது விற்பனையாகிறது. தொடர்பு:- ஆனந்தா, 226, காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2820 **(C/15119)**

## பிரத்தியேக வகுப்புகள்

எமது 'நியூ வீணாகானம்' மன்றத்தில் ஆண்டு, 1 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் விஷேட உயர்தர ஆசிரியர் குழுவினால் தைப்பூசத்தினத்தன்று ஆரம்பிக்கப்படும். மேலதிக விவரங்களுக்கு 16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 60, வைமன் வீதி,நல்லூர், யாழ்ப்பாணம். (83523)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 23.04.1971இல் பிறந்த, 8இல் செவ்வாய்க்குற்றம் உள்ள (பாவம்35) பட்டதாரி ஆசிரியைக்கு பொருத்தமான மணமகன் தேவை. அரசாங்கத் தொழில் புரிபவர்கள் விரும்பத்தக்கது. விள. இல. 1197,மே/பா உதயன். (83709)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில், பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றுக்கு அண்மையில் கலட்டிச் சந்திக்கு கிட்டவாக 10 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு மாலை 3.00 மணிக்குப் பின் திருமதி க.இரத்தினசிங்கம், மே/பா திருமதி பு.ஜயாத்துரை, ஆலடி, அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கு. (83628)

## பாடசாலை கட்டடங்களின் திறப்பு விழா

யாழ்ப்பாணம் புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் ஜேர்மன் தொழில் நுட்பநிறுவனம், யாழ்.கல்வித் திணைக்களம், வடபகுதி புனரமைப்பு புனர்வாழ்வு அதிகாரசபை ஆகியவற்றின் நிதி உதவியுடன் புனருத்தாரணம் செய்யப்பட்ட மூன்று மாடிக் கட்டடம், விஞ்ஞான ஆய்வுகூடம், மனையியல்கூடம் என்பனவற்றின் திறப்பு விழா நாளை செவ்வாய்க் கிழமை காலை 10.45 மணிக்கு அதிபர் திருமதி டி.ஜே.சின்னத்துரை தலைமையில் நடைபெறும்.

கட்டடங்களை, பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம் திறந்து வைப்பார்.

யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்க குரு முதல்வர் வண.பிதா எஸ்.ஜே.பி. செல்வராஜா அடிகள், யாழ்.கல்வித் திணைக்கள பொறியியலாளர் ஜி.சிவபாலன் ஆகியோர் இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (ஐ-173)


## ஐந்தாவது திருமண நிறைவுத் திருநாள்

05.02.2001



### திரு. சங்கரப்பிள்ளை புஷ்பகுமார்
### திருமதி அம்மன்கிளி புஷ்பகுமார்

அன்பு நிறை புத்திரராய்
அறிவார்ந்த மழலைகளாய்
எம்மடியில் தவழ்ந்திட்ட
இனிய தமிழ் சித்திரங்கள்
இல்லறக் கவின் வாழ்வில்
இணைந்த இத்தினத்தை
மெய்சிலிர்க்க இன்றெண்ணி
மனம் நெகிழ்ந்து மகிழ்கின்றோம்

வாழ்த்துகளுடன்
**குடும்பத்தினர்.**

*'ஆச்சி துணை'*
*சம்பந்தர் கடை அருகில்,*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.*

(C/15158)


## மின் விசிறிகள் அன்பளிப்பு

சண்டிலிப்பாய்,பெப்.5

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலைக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அறக் கட்டளை நிதியிலிருந்து ஐந்து கூரை மின்விசிறிகளும், ஒரு மேசை மின்விசிறியும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. கலாநிதி சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவற்றை அண்மையில் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியிடம் கையளித்துள்ளார். (ஐ-135)

## கடன் தொகை அதிகரிப்பு

சண்டிலிப்பாய்,பெப்.5

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலை ஊழியர் 'நலன் புரிச்சங்கம் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கடனை அதிகரித்துள்ளது.

இதுவரை ஆயிரம் ரூபாவாக வழங்கப்பட்ட கடனை இவ்வருடம் ஜனவரி மாதத்திலிருந்து இரண்டாயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தலைவரும் மாவட்ட வைத்திய அதிகாரியுமான டாக்டர் எஸ். சிவராணி தெரிவித்தார். (ஐ-135)

## பூங்கன்று கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.5

பூங்கன்று கண்காட்சியும் விற்பனையும் எதிர்வரும் 16ஆம், 17 ஆம், 18ஆம் திகதிகளில் கோயில் வீதியில் உள்ள 'பிளாண்ட் பரடைஸில்' இடம்பெறவிருக்கின்றன. (ஐ-3)

## நிவாரண விநியோகம் ஆரம்பம்

அரியாலை,பெப்.5

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஜனவரி மாதத்திற்கான இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்களை வழங்கி வருகின்றது.

சங்கத்தின் கிளைகள் ஊடாக இந்த நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.(ஐ-17)

## அமைதி வேண்டி ஆற்றுப்படை முற்றோதல்

வடமராட்சி,பெப்.5

நாட்டில் சமாதானமும், அமைதியும் ஏற்படவேண்டி கரவெட்டி அந்திரான் முருகன் கோவிலில் கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் திருமுருகாற்றுப்படை முற்றோதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, 'வித்தகம்' பரமசாமி சுவாமிகள் தலைமையில் பல ஆன்மீக நேயர்கள் ஒன்று கூடி திருமுருகாற்றுப் படையை பாராயணம் செய்து வருகிறார்கள்.

நாளை செவ்வாய்க்கிழமை திருமுருகாற்றுப்படை முற்றோதல் நிறைவுறும். மறுநாள் (புதன்கிழமை) தைப்பூசத்தினத்தன்று இதனை ஒட்டிய விஷேட பூசைகள் இடம்பெறும். (அ-173)

## கபடிப் போட்டி

வலி.வடக்கு.பெப்.05

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையேயான ஆண்களுக்கான கபடிப்போட்டியில் நாளை செவ்வாய்க்கிழமை கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திற்கு அருகில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.

★ திருநெல்வேலி நொதேன் வி. கழகம் எதிர் திருநெல்வேலி வை. எம்.எச்.ஏ.வி.கழகம்

★ அரியாலை ஐக்கிய வி. கழகம் எதிர் அரியாலை சாந்தி. வி.கழகம்.

★ கொக்குவில் மத்திய சனசமூக வி.கழகம் எதிர் விநாயகர் வி. கழகம். (ஐ-86)

## நிதியுதவிப் படக் காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.5

தொடரும் யுத்தத்தாலும் மற்றும் பல இன்னல்களாலும் மனநலம் மங்கியவர்களின் மறு வாழ்வுக்காக எஸ்.ரி.ஆர் பிலிம்ஸின் ஆதரவுடன் மருத்துவ மாணவர்கள் நிதியுதவிப் படக்காட்சியியை நாளை மறுதினம் புதன்கிழமை ராஜா திரையரங்கில் காண்பிக்க உள்ளனர்.

காலை 9 மணிமுதல் மூன்று காட்சிகள் காண்பிக்கப்படவுள்ளன. (ஐ-3)


## புதிய சித்திரத் தேர் நிர்மாணிப்பு

வதிரி களையன்தோட்டம் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி பெருமானுக்கு புதிய சித்திரத்தேர் நிர்மாணிப்பதற்கு

திருவருள் பாலித்துள்ளது.

நிர்மாணிப்பு:
திருநெல்வேலி சிற்பக் கலைஞர்
கலாபூஷணம்
**சுப்பிரமணியம் இராசரத்தினம் குழுவினர்.**

(83754) - ஆலய அறங்காவல் சபையினர்.



## மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்



### பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்

தமிழ் தனை தரணிக்கு வழங்கி
தனக்கென தனியிடத்தைப் பெற்று
உயர் கல்வித்துறை தலைமையேற்று
உலகறிய பணியாற்றும் செம்மலே
வாழி! வாழி! வையகம் உள்ளவரையே!

**கல்விக்கழகம், கல்வியியல் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

(83750)



## மனமார்ந்த நன்றியும் பாராட்டுதலும்

வடக்கு - கிழக்கு மாகாண
உள்ளூராட்சி ஆணையாளராகப் பல ஆண்டுகள் சிறப்பாகப்
பணிபுரிந்து ஓய்வுபெற்றுச் சென்றுள்ள

### திரு.க.சபாபதிப்பிள்ளை

அவர்கள் தமது சேவைக் காலத்தில் அரச சேவைக்கும், உள்ளூராட்சித் திணைக்களத்திற்கும், ஊழியர்களுக்கும் ஆற்றிய சேவைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து ஓய்வு காலம் நிம்மதியும், மகிழ்வும் இணைந்து அமைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

மேலும், நீண்டகாலம்

உள்ளூராட்சித் திணைக்களத்தில் பல சிறப்பான பதவிகளை அலங்கரித்து யாழ்.மாநகர ஆணையாளராக அரும்பணியாற்றி வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவி உயர்வுபெற்றுள்ள

### திரு.வே.பொ.பாலசிங்கம்

அவர்களை மகிழ்ச்சியுடன் பாராட்டி வரவேற்று அவரது பணி வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்கும், உள்ளூராட்சித் திணைக் களத்திற்கும் வளமானதும், செழிப்பானதுமான எதிர்காலத்தை கட்டியெழுப்பி சிறப்புமிக்க சேவைபுரிய நீண்ட பல்லாண்டு வாழ்வதற்கு நல்லூரானை வேண்டிக் கொள்கின்றோம்.

தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள்,
செயலாளர், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்,
நகரசபை அலுவலகம்,
வல்வெட்டித்துறை. (C/15157)



## இப்பொழுது புதிய இடத்தில் எங்கள் சேவை

எமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களான உங்களுக்கு மேலும் சிறப்பாகச் சேவைகளை வழங்கும் பொருட்டு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகம் இன்று 2001.02.05 தொடக்கம் இல.12, கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் கட்டடத்தின் முதலாவது தளத்துக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வரையறுக்கப்பட்ட**
**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்**

"றக்ஷண மந்திரம" 21, வெக்சோல் வீதி, கொழும்பு- 02
*தொலைபேசி:-* 325311-16, 327322-34, 435301-04, 320906, 329748
*தொலைநகல்:-* 447742 (83661)

# மீண்டும் முதல்வராகும் வாய்ப்பு கருணாநிதிக்கே அதிகமாம்!

## தமிழகக் கருத்துக் கணிப்பில் தகவல்



சென்னை, பெப். 5

தமிழ் நாட்டில் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதல்வராகும் வாய்ப்பு தி.மு.க தலைவர் கருணாநிதிக்கு அதிகம் உள்ளதாகக் கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.

சென்னை லயோலா கல்லூரியின் சார்பில் பேராசிரியர் ராஜதேவம் தலைமையிலான குழுவினர் தமிழகத்தின் 30 மாவட்டங்களில் இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தியுள்ளனர்.

கருத்துக்கணிப்பில்,

தமிழகத்தில் கருணாநிதி அடுத்த முதல்வராவதற்கு 57.4 சதவீதத்தினரும் ஜெயலலிதா முதல்வராக 22.3 சதவீதத்தினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

சட்ட சபைத் தேர்தலில் தி.மு.க கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என 42 6 சத வீதத்தினரும் அ.தி.மு.க கூட்டணி ஆட்சியமைக்கும் என்று 35.5 சதவீதத்தினரும் கருத்துத் தெரிவித்தனர்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள கூட்டணிகளின் அடிப்படையிலேயே இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டதாகவும்— தேர்தல் சமயத்தில் கூட்டணிகளில் இடம்பெறும் கட்சிகளில் மாற்றங்கள் ஏற்பட்டால் இந்த முடிவுகளிலும் மாற்றங்கள் ஏற்படும் எனக் கூறப்படுகிறது.

தமிழக சட்டசபையின் காலம் இந்த ஆண்டு நடுப்பகுதியில் முடிவடைவது குறிப்பிடத்தக்கது. (ஒ-6-7)

# ரஜனிகாந்திடம் பணம் மோசடி; முன்னாள் பிரதமரின் மகன் கைது!

ஹைதராபாத், பெப். 5

நடிகர் ரஜனிகாந்திடம் பணம் மோசடி செய்ததாக முன்னாள் இந்தியப் பிரதமர் பி. வி, நரசிம்மராவின் மகனான பி. வி. ரங்கராவ் கைது செய்யப்பட்டுள்ளார்.

சமீபத்தில் ரங்கராவ் மீது பொலீஸில் ரஜனிகாந்த் முறைப்பாடு செய்தார்.

அந்த முறைப்பாட்டில் 'ஸ்ரீ ராகவேந்திர சுவாமி மாஹித்யம்' என்ற பெயரில் திரைப்படம் தயாரித்துத் தருவதாகக் கூறி ரங்கராவ் தன்னிடம் 2 கோடி ரூபாவைப் பெற்றதாக ரஜனி குறிப்பிட்டிருந்தார்.

பணம் கொடுத்து நீண்ட நாள்களாகியபோதும் இது வரை ரங்கராவ் படப்பிடிப்பை ஆரம்பிக்கவில்லை என்றும்—

இத் திரைப்படத்தைத் தயாரிக்கும் சாத்தியங்கள் எதுவும் தென்படவில்லை என்றும் ரஜனி முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து ரங்கராவின் உதவியாளரான கோபால கிருஷ்ண ரெட்டி என்பவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

இந்த விசாரணைகளில் பணமோசடி நடந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்ததால் பொலீஸார் ரங்கராவை இப்போது கைதுசெய்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் ஆட்சியைத் தக்க வைக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு லஞ்சம் கொடுத்ததற்காக முன்னர் தண்டனை விதிக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

தந்தையும், மகனும் இந்தியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-6-7)

# கறுப்பினச் சிறுவன் படுகொலையால் இனத்துவேஷத் தாக்குதல்கள் குறித்து நோர்வேயில் அச்சம்!

ஒஸ்லோ, பெப். 5

கறுப்பினச் சிறுவன் ஒருவன் படுகொலை செய்யப்பட்டதையடுத்து நோர்வேயில் இனத்துவேஷத் தாக்குதல்கள் குறித்த அச்சம் எழுந்துள்ளது.

கடந்த வெள்ளியன்று ஒஸ்லோ நகரில் பெஞ்சமின் கர்மான்சன் என்ற 15 வயதுக் கறுப்பினச் சிறுவன் படுகொலை செய்யப்பட்டான்.

இக்கொலை தொடர்பாக 'பூபொஸ்' என்ற அமைப்பைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். இந்த அமைப்பைச் சேர்ந்த மேலும் 4 பேரைப் பொலீஸார் தேடி வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் தற்போது பரவி வரும் புதிய நாஜிக் கொள்கைகளை 'பூபொஸ்' அமைப்பினர் தீவிரமாகப் பின்பற்றி வருவதாகவும்—

கறுப்பினச் சிறுவனை அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் இனத்துவேஷத்தின் காரணமாகவே படுகொலை செய்துள்ளதாகவும் பொலீஸ் ர் தெரிவித்தனர்.

ஜேர்மனி உட்படச் சில ஐரோப்பிய நாடுகளில் புதிய நாஜிக்கள் என்று தம்மைக் கூறிக்கொள்பவர்களால் சிறுபான்மையினர் மற்றும் அரசியல் தஞ்சமடைந்தோர் மீது வன்முறைத் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டிருந்தன.

ஆனால் நோர்வேயில் இன முரண்பாடு காரணமாகத் தாக்குதல் அல்லது படுகொலை நடப்பது இதுவே முதல்தடவை என்பதால் அங்கு இன ரீதியான தாக்குதல்கள் குறித்து அச்சம் எழுந்துள்ளது.

தனது இனமே ஆழ்ப் பிறந்தது என்ற சர்வாதிகாரி ஹிட்லரின் நாஜிக் கட்சிக் கொள்கையே தற்போது புதிய நாஜிக்களின் கொள்கையாக உள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

# பலஸ்தீனத்துக்கு இந்தியா ஆதரவு

கெய்ரோ, பெப். 5

பலஸ்தீனம் தனி நாட்டுக்கான தனது ஆதரவை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

எகிப்துக்கு 4 நாள்கள் விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்சிங் அரபு லீக்கின் செயலர் ஜெனரல் அஸ்வத்திடம் இந்தியாவின் ஆதரவைத் தெரிவித்தார்.

சர்வதேச மன்றங்களில் பலஸ்தீனத்துக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளித்து வருவதற்கு மஜீத் அப்போது நன்றி கூறினார். (ஒ)




# இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தில் சுரங்கத்தில் சிக்கியோரை மீட்க 10 பேர் அடங்கிய மீட்புக் குழு

ராஞ்சி, பெப். 5

இந்தியாவில் நிலக்கரிச் சுரங்கத்துக்குள் சிக்கியுள்ள 35 பணியாளர்களையும் மீட்பதற்காக 10 பேரடங்கிய குழு ஒன்று சுரங்கத்துக்குள் சென்றுள்ளது.

ஜார்கண்ட் மாநிலம் டன்கேயில் நிலக்கரிச் சுரங்கம்ஒன்றிற்குள் கடந்த வெள்ளியன்று வெள்ளம் புகுந்ததில் மண் சரிவு ஏற்பட்டு வெளியேறும் பாதை அடைபட்டது.

இதனால் இரு அதிகாரிகள் உட்பட 35 பேர் உள்ளே சிக்கியுள்ளனர்.

நேற்று இவர்களை மீட்பதற்காகச் சென்ற மீட்புப் பணியாளர்கள், சுரங்கத்தினுள் பிராணவாயு இல்லாததால் வெளியே வந்து விட்டனர்.

பின்னர் பிராணவாயு கலங்கள், நச்சுவாயுவிலிருந்து காக்கும் முகமூடிகள் ஆகியவற்றுடன் 10 பேர் சுரங்கத்தினுள் சென்றுள்ளனர்.

சுரங்கத்தினுள் புகுந்துள்ள வெள்ளத்தை அகற்ற சிறிய நீரிறைக்கும் இயந்திரங்களையும் அவர்கள் எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்த விபத்து ஏற்பட்டு 72 மணி நேரம் ஆனபோதும் உள்ளே சிக்கியவர்கள் உயிருடன் இருக்கும் நம்பிக்கை அற்றுப்போகவில்லை என நேற்று அதிகாரி ஒருவர் கூறினார். (ஒ-6-7)

# தமிழ்த் தீவிரவாதிகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசு முறைப்பாடு

சென்னை, பெப். 5

தமிழ்நாட்டில் செயற்பட்டு வரும் தீவிரவாத அமைப்புகளைத் தடை செய்யும்படி மத்திய அரசிடம் தமிழக அரசு முறைப்பாடு செய்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை தமிழக சட்டசபையில் முதல்வர் கருணாநிதி இதனைத் தெரிவித்தார்.

தமிழ்நாடு விடுதலைப் படை, தமிழ்த்தேசிய விடுதலை முன்னணி போன்ற தீவிரவாத இயக்கங்கள் 1986 ஆம் ஆண்டிலேயே உருவாகி விட்டதாகவும்—

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனுடன் தொடர்புடைய இந்தத் தீவிரவாத அமைப்புகளுடன் தமிழக அரசுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லை என்றும் கருணாநிதி மேலும் கூறினார்.

தற்போதைய தி.மு.க ஆட்சிக் காலத்தில் தான் தமிழ்த் தீவிரவாத அமைப்புகள் அரசின் ஆதரவோடு வளர்ந்து வருவதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ் சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா மீதான தடை நீக்கம்

அமெரிக்காவில் தயாரிக்கப்படும் ஹெலிகொப்டர் உதிரிப் பாகங்களை இந்தியாவுக்கு விற்பதற்கு விதித்திருந்த தடையை அமெரிக்க அரசு நீக்கியுள்ளது

புதிய அதிபர் புஷ்ஷின் நிர்வாகம் ஆசியக் கொள்கைகள் சம்பந்தமாக எடுத்துள்ள முதலாவது நடவடிக்கை இதுவாகும். (ஒ)

# ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில் பிலிப்பைன்ஸில் எஸ்ரடா மீது சட்ட நடவடிக்கை!

மணிலா, பெப். 5

பிலிப்பைன்ஸில் அதிபர் பதவியிலிருந்து விலகிய ஜோசப் எஸ்ரடா மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக புதிய அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து நீதித்துறை அமைச்சர் பனாவாத பரஸ் கூறுகையில்,

இன்னும் சில நாள்களில் எஸ்ரடா மீது 3 வழக்குகள் தொடரப்படும் என்றும்,

இவற்றில் இரு வழக்குகள் எஸ்ரடாவின் நண்பரும், வர்த்தகருமான நாட் ஜுனமைட் அளித்த ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

எஸ்ரடா, அவரது பதவிக் காலத்தில் 2 கோடி டொலருக்கும் மேற்பட்ட சட்ட விரோதச் சொத்துக்களை வாங்கிக் குவித்துள்ளதாக பிலிப்பைன்ஸ் அரசு தரப்பு வழக்கறிஞர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊழல் வழக்குகளிலிருந்து எஸ்ரடாவை தப்ப வைக்க நடந்த முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் கிளர்ந்தெழுந்ததாலேயே சில வாரங்களுக்கு முன்னர் அவர் அதிபர் பதவியிலிருந்து விலகியிருந்தார்.

அரசியலில் பிரவேசிப்பதற்கு முன்னர் சினிமா நடிகராக இருந்த எஸ்ரடா அதிபர் தேர்தலில் போட்டியிட்ட போது, நேர்மையான ஆட்சியைத் தருவார் என்ற நம்பிக்கையிலேயே பிலிப்பைன்ஸ் மக்கள் பெரும் ஆதரவைத் தந்திருந்தனர். (ஒ-7)

# இஸ்ரேலியத் தேர்தலில் போட்டியிடும் வலதுசாரித் தலைவர் ஷரோன் சமாதானப் பேச்சில் நாட்டம்

டெல் அவிவ், பெப். 5

இஸ்ரேலிய வலதுசாரித் தலைவர் ஏரியல் ஷரோன் தான் பிரதமரானால் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்துடன் சமாதானப்பேச்சுக்களை நடத்தத் தயார் என்று தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரான ஷரோன் பலஸ்தீனர்களுடன் இஸ்ரேல் கடும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தி வந்தார்.

ஆனால் சமீபத்தில் ரஷ்யத் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த ஷரோன்,

யுத்தத்தின் கொடுமைகள் பற்றித் தனக்கு நன்கு தெரியும் என்றும், ஆகவே பலஸ்தீனர்களுடனான மோதலைத் தவிர்க்க அரபாத்துடன் பேச்சு நடத்தத் தயாராக உள்ளதாகவும் — கூறியுள்ளார்.

நாளை நடைபெற உள்ள இஸ்ரேலியப் பிரதமர் பதவித் தேர்தலில் கடும் போக்குள்ள ஷரோன் வெற்றி பெறும் வாய்ப்பு அதிகம் உள்ளதாகக் கூறப்பட்டதால் அவர் பிரதமரானால் இஸ்ரேல்—பலஸ்தீனம் இடையேயான மோதல் தீவிரமடையும் எனக் கருதப்பட்டது.

தற்போது தனது கடும் போக்கைக் கைவிட்டுஅரபாத்துடன் பேச்சு நடத்தத் தயார் என ஷரோன் கூறியுள்ளது மேற்காசியாவில் அமைதி ஏற்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. (ஒ-6-7)

# தமிழ்நாடு - கேரளா எல்லையில் சிறப்பு அதிரடிப் படையினருடன் வீரப்பன் கும்பல் கடும் மோதல்

சென்னை, பெப் 5

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் கும்பலுக்கும் சிறப்பு அதிரடிப் படையினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

தமிழ் நாடு மற்றும் கேரள மாநிலங்களின் எல்லையில் வள்ளியாறு என்ற இடத்தில் இந்த மோதல் இடம் பெற்றது.

புலனாய்வுத் துறையினர் வழங்கிய தகவல் ஒன்றையடுத்து இப்பகுதியில் தமிழக கர்நாடக மாநிலங்களின் கூட்டு அதிரடிப்படையினர் வீரப்பன் கும்பலைத் தேடிச் சென்றனர்.

காட்டுப்பகுதிக்குள் அதிரடிப்படையினர் சென்ற போது அங்கிருந்த வீரப்பன் கும்பலைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதனையடுத்து இருதரப்பினருக்கும் இடையே சிறிது நேரம் கடும் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது.

இறுதியாக உணவுப் பொருள்கள் உட்படத் தமது உடைமைகளைக் கைவிட்டு வீரப்பன் கும்பலைச் சேர்ந்தவர்கள் தப்பிச் சென்று விட்டதாகக் கூறப்படுகிறது.

தப்பிய கும்பலில் வீரப்பன் இருந்தது குறித்து அதிரடிப்படையினர் உறுதி செய்துள்ளனர். (ஒ-7)

# தமிழர்களுக்காகப் போராடுபவர்கள் புலிகள் அவர்களுடன்தான் அரசு பேச வேண்டும்

## சுதந்திரதின நிகழ்வில் ஸ்ரீ. ல. சு. கட்சியின் யாழ். பிரமுகர் வலியுறுத்து

குருநகர், பெப். 5

''தமிழரின் சுதந்திரத்துக்காகப் போராட்டம் நடத்திய பல ஆயுதக் குழுக்கள் போராட்டத்தைத் தொடர முடியாமல் தமது ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி விட்டு, அரசியலுக்குத் திரும்பியுள்ளன. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே இலங்கைப் படைகளுடன் சரிசமமாக நின்று ஆயுதப் போர் நடத்தி வருகிறார்கள். எனவே எமது அரசு தமிழ் மக்களுக்காகப் போராட்டம் நடத்தும் தமிழீழ விடுதலைப்புலிகளுடனேயே சமாதானப் பேச்சுக்களை நடத்த வேண்டும்''

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பணிமனையில் நேற்று நடைபெற்ற — இலங்கையின் 53 ஆவது சுதந்திரதினத்தை ஒட்டிய — பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இணைச் செயலாளர் த.தேவகுலநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தப் பொதுக் கூட்டம் நேற்றுக் காலை 10.00 மணிக்கு கட்சியின் யாழ். கிளை உபதலைவர் எஸ். சௌந்தரநாயகம் தலைமையில் நடைபெற்றது. த.தேவகுலநாயகம் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

சிங்களவர்—தமிழர் இருவருக்குமே ஒன்றுபட்ட இலங்கையில் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற நோக்குடனேயே பிரித்தானியா இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கியது.

ஆனால் 1956 ஆம் ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த போது இலங்கையின் அரச கரும மொழியாகத் தனிச் சிங்களம் மட்டும் கொண்டுவரப்பட்டது. அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கொல்வின் ஆர். டி. சில்வா இந்தச் சட்டத்தை எதிர்த்ததுடன் தமிழ் மக்கள் பிற்காலத்தில் தனி நாடு கோரிப் போராட்டம் நடத்தும் வாய்ப்பை இந்தச் சட்டம் ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டார்.

சிங்கள மக்கள் தமிழருக்கு எதிரானவர்கள் அல்லர். அதே போன்று தமிழ் மக்களும் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் சிங்கள இனவாதிகளினாலேயே இலங்கையில் இனப் பிரச்சினை வளர்ந்து வருகிறது.

தமிழரின் பிரச்சினையைத் தீர்த்து அவர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்குக் கிழக்கில் மாநில சுயாட்சியை வழங்கும் நோக்குடன் எமது கட்சியின் தலைவியும் இந்த நாட்டின் ஜனாதிபதியுமான சந்திரிகா, வெளிநாடுகளுக்கு எமது பிரச்சினையைச் சொல்லி அவர்களினூடாக இப்பிரச்சினையை சமாதான வழியில் தீர்த்து வைப்பதற்கு முழு முயற்சிகளையும் எடுத்து வருகிறார். போராட்டம் நடத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச அவர் முயற்சி எடுக்கிறார். விரைவில் பேச்சு நடைபெறும் எனப் பத்திரிகைகள் மூலம் தெரிய வருகிறது.

ஆனால் இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க விடாமல் எதிர்க்கட்சியான ஐ. தே. கட்சி கண்டியில் இருந்து பாதயாத்திரையை நடத்தக் கங்கணம் கட்டியுள்ளது.

இந்த நாட்டில் சமாதானம் மலரவேண்டும், சிங்களவர் தாம் இருந்த இடங்களுக்கு வந்து குடியேறவேண்டும், அதேபோன்று முஸ்லிம்களும் யாழ்ப்பாணத்தில் வந்து மீளக் குடியேற வேண்டும். யுத்தம் காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள எமது தமிழ் இளைஞர், யுவதிகளும் தமது இடங்களுக்கு வந்து மீளக் குடியேற வேண்டும். எனவே இலங்கையில் சமாதானம் மலர அரசு — புலிகள் பேச்சு வார்த்தை நடைபெற வேண்டும்.— என்றார்.

தலைவர் எஸ். சௌந்தரநாயகம் தமது உரையில் தெரிவித்ததாவது:-

1976 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தின் இலங்கையின் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் எதுவும் விமரிசையாக நடைபெறவில்லை. சில கட்சிகள் இச் சுதந்திரதின நிகழ்ச்சிகளைப் புறக்கணித்துள்ளன. யாழ். மேயராக துரையப்பா இருந்த காலத்தில் சுதந்திர தின நிகழ்வுகள் விமர்சையாக நடைபெற்றன. யாழ்ப்பாணப் பாடசாலைகளும் இந்த நிகழ்வில் முன்வந்து பங்குபற்றின. தற்போதைய சூழ்நிலை சரியில்லாததால் மக்கள் பெருமளவில் கூடுவதற்குப் பயப்படுகிறார்கள். ஆனால் எமது கட்சி இந்த நிகழ்வுகளை யாழ்ப்பாணத்தில் நடத்திவருகின்றது. என்றார்.

மீனவர்களின் சார்பில் உரையாற்றிய வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி. தவரட்ணம் தமது உரையில் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் உள்ள தொழிலாளர்கள் தான் நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் தொழில் செய்ய முடியாத அளவுக்கு அவர்களுடைய சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது.

நான் வசிக்கும் குருநகரில் இருந்து ஒரு மீனவன் தனது ஆடையை முற்றிலும் அணிந்து கொண்டு கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லமுடியாத நிலையே இன்றுள்ளது. இன்றும் கூட நீங்கள் குருநகர் இறங்குதுறைக்குச் சென்று பார்க்கலாம். உள்ளாடையுடன் மட்டுமே கடலுக்குச் செல்ல மீனவர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள். உடுத்தும் சரத்தைக் கழற்றிக் கரையில் வைத்துவிட்டே அவன் கடலுக்குள் இறங்க அனுமதிக்கப்படுகிறான். இதுதான் எங்கள் சுதந்திரம். எனவே சமாதானம் நாட்டில் மலர அனைவரும் பிரார்த்திக்க வேண்டும் — என்றார்.

இந்நிகழ்வில் சங்குவேலி கிராம அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த இ. அமிர்தலிங்கம், மூளாய் விவசாய அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த சு. கந்தசாமி, யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாக உறுப்பினர் ஆர். பி. ஜெயதாஸ், சாவல்கட்டு சடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் க. நாகலிங்கம், சுன்னாகம் இளைஞர் கழகத்தைச் சேர்ந்த எஸ். தமயந்தி, எஸ். கே. தங்கவடிவேல் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். (உ-51)

# பருவம் தப்பிப் பெய்யும் மழையால் அறுவடை பாதிக்கப்படும் நிலை

மூளாய், பெப். 5

யாழ். குடாநாட்டில் பருவம் பிந்திய நிலையில் பெய்து வரும் மழை காரணமாக பெரும்போக நெல் அறுவடை பாதிப்படையும் ஆபத்து உருவாகியுள்ளது. அறுவடை செய்யும் பருவத்தில் நெல்விளைந்து காணப்படுகின்றது. எனினும் குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இடையிடையே மழை பெய்து வருகின்றது. சில தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ளது. இவ்வாறன பகுதிகளில்காணப்படும் நெல்வயல்கள் சில முற்றாக அழியும் நிலை உருவாகியுள்ளது.

மேலும் சில பகுதிகளில் விவசாயிகள் குறுகிய கால வயதுடைய நெல் இனங்களைப் பயிரிட்டுள்ளனர். இவ்வாறான நெல்வயல்களும் நீடித்துச் செல்லும் பருவமழை காரணமாகப் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

பெரும்போக நெற்செய்கையின் ஆரம்பகாலங்களில் அதிக மழை தேவையான காலத்தில் போதிய மழை பெய்யவில்லையென்றும் தற்போது அநாவசியமாக மழை பெய்வதால் தமக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் பலரும் தெரிவித்துள்ளனர். (ஐ-99)

# வலி. மேற்குப் பகுதிகளில் தொழு நோயைத் தடுப்பதற்கு தீவிர நடவடிக்கைகள்

மூளாய், பெப். 5

வலிகாமம் மேற்கில் தொழு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

சுழிபுரம் கிழக்கு, காட்டுப்புலம், பாண்டை வெட்டை, குடாக்களை, கம்பனை ஆகிய பகுதிகளில் தொழு நோய் அல்லது தொழு நோய்க்குரிய அறிகுறிகள் அவதானிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்தே இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த பல வருடங்களாக மேற்படி பகுதிகளில் இந்த நோயாளிகள் அல்லது அவர்களின் வழித் தோன்றல்கள் உள்ளனர். தற்போது இவர்களை அடையாளம் காண்பதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். தொழு நோய்த் தடுப்பு இயக்கம் இவ் விடயத்தில் தற்போது அதிக கவனம் செலுத்தி தனது நடவடிக்கைகளைத் துரிதப் படுத்தியுள்ளது. (ஐ-99)

# குடும்பநல சேவையாளருக்கு சீருடைக்குப் பதிலாகப் பணம்

சண்டிலிப்பாய், பெப். 5

அரசாங்க குடும்பநலசேவை உத்தியோகத்தர்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த இலவச சீருடைக்குப் பதிலாக வருடாந்தம் சீருடைக்கான கொடுப்பனவாக ஐயாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தினால் இவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் சீருடைத் துணி தரம் குறைந்ததாக இருந்து வருவதால் தமக்குத் தாதிய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு வருவதைப்போல அதற்கான கொடுப்பனவைப் பணமாக வழங்க வேண்டும் என்று அரசாங்க குடும்ப நல சேவை உத்தியோகத்தர் சங்க யாழ். கிளை இது தொடர்பாகக் கோரிக்கை விடுத்து வந்தது.

கொழும்பிலுள்ள இவர்களது தொழிற்சங்கத் தலைமைபீடமும் சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் இது தொடர்பாகப் பேச்சு நடத்தியிருந்தது. இதனை அடுத்து சீருடைக்கான கொடுப்பனவு வழங்குவதற்கான சுற்றறிக்கை கொழும்பிலுள்ள சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. யாழ். சுகாதாரசேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கும் இந்தச் சுற்றறிக்கை அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி, பெப். 5

அல்வாய் வடக்கு வேவிலந்தை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை விசேட பூசையும் சமயச் சொற்பொழிவும் இடம் பெறும்.

இளைப்பாறிய அதிபர் ரி. சிதம்பரப்பிள்ளை சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஐ—117)

★ ★ ★

கோண்டாவில் வடக்கு சாமுண்டாதேவி ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தான மணவாளக்கோல தினமான நாளை காலை 10 மணிக்கு நவோத்தர சங்காபிஷேகம் இடம்பெறவிருக்கின்றது.

பிற்பகல் 5 மணிக்குத் திரு ஊஞ்சலும் திருவிளக்குப்பூசையும் இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார் (உ-3)

## பெற்றோரை இழந்த சிறுவருக்கு உதவி

பருத்தித்துறை, பெப். 5

வடமராட்சி லயன்ஸ் கழகம் வடமராட்சிப் பகுதியில் பெற்றோரை இழந்த பாடசாலைச் சிறார்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலை அதிபர்களின் சிபார்சுடன் தாய், தந்தை அற்றவர்களின் பட்டியலை லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ். சோமசுந்தரத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-118)

# பதவியுயர்வுக்குரிய சம்பளத்தை ஆசிரியர்களுக்கு வழங்க ஏற்பாடு

## கல்விச் செயலாளர் தகவல்

திருகோணமலை, பெப். 5

பதவியுயர்வுக் கடிதம் மற்றும் சம்பள மாற்றக் கடிதம் கிடைக்கப் பெற்றும் இதுவரை பதவியுயர்வுக்குரிய சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளாத ஆசிரியர்களுக்கு அடுத்தமாதச் சம்பளத்துடன் புதிய சம்பளம் வழங்கப்படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு—கிழக்கு மாகாணக்கல்விபண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரன்.

சம்பள மாற்றக் கடிதம் கிடைத்தும் புதிய சம்பளம் வழங்கப்படாதஆசிரியர்களின் நிலை குறித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் குழு ஒன்று நேற்று முன்தினம் கல்வி அமைச்சின் செயலாளரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

இந்தச் சந்திப்பில் செயலாளர் க. பரமேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு — கிழக்கில் உள்ள பெரும்பாலான ஆசிரியர்களின் பதவியுயர்வுக் கடிதங்கள் மற்றும் சம்பளமாற்றக் கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனினும் பலர் புதிய சம்பள விவரத்தின்படி தமக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை என முறைப்பாடுகள் செய்து வருகின்றனர்

எனவே இதனை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, வேறு பணிகளை உடனடியாக நிறுத்தி சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்குப் புதிய சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளேன் என்றார் அவர். (உ-7)

# தமிழ் மொழி மூலமான ஆசிரிய கலாசாலைகள் தொடர்ந்து இயங்கும்

காரைநகர், பெப். 5

தமிழ் மொழி மூலமான ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் தொடர்ந்தும் மூன்று, நான்கு வருடங்கள் இயங்க உள்ளன. அதன் பின்னரே அவை ஆசிரிய நிலையங்களாக மாற்றப்படும் என ஆசிரிய கல்வி நிர்வாகக் கிளைப் பணிப்பாளர் விஜிதகம தெரிவித்துள்ளார்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்களுக்கான மாதாந்தக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை கல்வி அமைச்சில் நடைபெற்ற போதேகல்வி நிர்வாககிளைப் பணிப்பாளரினால் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

அவர் மேலும் தெரிவிக்கையில்—

சிங்கள மொழி மூலமான ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் பெரும்பாலும் இவ்வாண்டுடன் நிறுத்தப்பட்டு அவை ஆசிரிய நிலையங்களாக மாற்றப்படும்.

காவ்வாண்டுக்கான—தமிழ் மொழி மூலமான—ஆசிரிய கலாசாலை அனுமதிகள் எதிர்வரும் ஏப்பிரல் மாதம் இடம் பெறும்.

## தரமற்ற கவச ஆடைகளை விநியோகித்த

# பிரிட்டன் நிறுவனத்துக்கு எதிராக இலங்கை இராணுவம் வழக்கு!

கொழும்பு,பெப்.5

இராணுவத்தினருக்கான கவச அணிகளை விநியோகிப்பதற்காக லண்டனிலுள்ள - பிரபல - கவச அணிகள் தயாரிப்பு நிறுவனம் ஒன்றுக்கு முற்பணமாக செலுத்தப்பட்ட ஒரு கோடி இருபது லட்சம் ரூபாவை மீளப் பெறுவதற்காக அந்த நிறுவனத்துக்கெதிராக இலங்கை இராணுவம் வழக்குத் தாக்கல் செய்ய இருக்கிறது.

இராணுவத்தினருக்கான ஆயிரம் கவச ஆடைகளை ஒவ்வொன்றும் 336 அமெரிக்க டொலர் என்ற கட்டணத்துடன் மேற்படி நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக 1999 ஆம் ஆண்டு அந்த நிறுவனத்துடன் இலங்கை இராணுவம் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது.

ஒப்பந்தப்படி -

அந்தக் கவச ஆடைகள் பிரிட்டனிலிருந்து கப்பலில் ஏற்றப்பட்டதும் முழுக் கட்டணமான 3 லட்சத்து 66 ஆயிரம் டொலரில் அரைவாசியை - 1லட்சத்து 83ஆயிரம் டொலரை - சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு இலங்கை இராணுவம் செலுத்தியது.

சம்பந்தப்பட்ட கவச ஆடை கள் நாட்டுக்கு வந்து சேர்ந்ததும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் அவற்றைச் சோதனை செய்து பார்த்தனர் என்றும்-

எதிர்பார்த்த தரத்தில் அவை இல்லாததால் மிகுதிக் கட்டணமான ஒரு லட்சத்து 83ஆயிரம் டொலர் சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு செலுத்தப்படாமல் நிறுத்தப்பட்டது என்றும்-தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அந்த எஞ்சிய கட்டணத்தையும் இலங்கை இராணுவம் செலுத்த வேண்டும் என்று கோரி சம்பந்தப்பட்ட பிரிட்டன் நிறுவனம் பிரிட்டனில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தது.

எனினும் ஒப்பந்தம் இலங்கையில் கைச்சாத்திடப்பட்டதால் அந்த விடயத்தில் தலையிட முடியாது என்று தெரிவித்து பிரிட்டன் நீதிமன்றம் அந்த வழக்கைத் தள்ளுபடி செய்து விட்டது.

ஆனால், தற்போது இலங்கை இராணுவம் தான் செலுத்திய முற்பணத்தை சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் இருந்து மீளப் பெறுவதற்காக வழக்குத் தாக்கல் செய்ய இருப்பதாகத் தெரிகின்றது.

தரமற்றவை என்று கணிக்கப்பட்ட ஆயிரம் கவச ஆடைகளும் பனாகொடையிலுள்ள இராணுவக் களஞ்சியத்தில் வெறுமனே போடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## தெல்லிப்பழை, ஊர்காவற்றுறையில் திறக்கப்பட்ட

# மீள்குடியமர்வுப் பணிக்கான அலுவலகங்கள் மூடப்பட்டன

யாழ்ப்பாணம்,பெப்.5

தெல்லிப்பழை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளில் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட (யு.என்.டி.பி) நிறுவனத்தின் உதவியுடன் திறக்கப்பட்ட மீள் குடியமர்வு அலுவலகங்கள் அரசாங்க அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் மூடப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அலுவலகங்களை ஆரம்பித்து ஒரு வருடத்துக்கான அனைத்து உதவிகளும் ஐ.நா. நிறுவனத்தினால் வழங்கப்பட்டன.

அலுவலகத்துக்குரிய கட்டடங்கள அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன் அலுவலகத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களும் இந் நிறுவனத்தினால் வழங்கப்பட்டன.

இந்த அலுவலகங்களில் கடமையாற்றிய 20 ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளும் ஒரு வருடகாலத்துக்கு மேற்படி நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வந்தன.

ஐ.நா. நிறுவனத்தின் ஒப்பந்தம் முடிவடைந்த பின் இந்த அலுவலகங்களை அரச அதிகாரிகள் மூடி விட்டதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

மீளக் குடியமர்வை அதிகரிக்கச் செய்யும் நோக்குடனும் மீளக் குடியமர்ந்த மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்குடனுமே இந்த அலுவலகங்கள் அரசாங்க அதிகாரிகளின் ஆலோசனையுடன் திறக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அலுவலகங்கள் மூடப்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்த உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் அரச அலுவலகங்களுக்கு எடுத் துச செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-5)

# உயர உயரப் பறக்கும் வாழ்க்கைச் செலவுப் புள்ளி!

கொழும்பு,பெப்.5

இலங்கை அரசு வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக ரூபாவின் பெறுமதியை மிதக்க விடும் நடவடிக்கையை அறிவிப்பதற்கு முன்னரே-இந்த ஆண்டின் - முதல் நான்கு வாரத்தில்-கொழும்பில் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் முன்னர் எப்போதும் இல்லாதவாறு 21.26 புள்ளிகளால் அதிகரித்திருக்கிறது.

சனத்தொகை, புள்ளி விவரத் திணைக்களம் கடந்த வாரம் விடுத்த தகவல்கள் இதனை உறுதி செய்தன.

கடந்த டிசெம்பர் மாத வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் அதிகரிப்புடன் ஒப்பிடும்போது இது 104.5 புள்ளிகள் அதிகமாகும்.

வழமையாக இந்த அதிகரிப்பு மாதந்தோறும் ஒரு வீதத்துக்கும் அதிகமாக இருப்பதில்லை. ஆனால் இந்த ஆண்டின் முதல் நான்கு வாரத்தில்-அதாவது ஜனவரி 25ஆம் திகதி வரை - இது 3.9 வீதம் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ரூபாவின் பெறுமதியை மிதக்க விடும் முடிவை ஜனவரி 23 இல் அரசு எடுத்தது. எனினும் இம்முடிவினால் சந்தையில் ஏற்பட்ட விலை அதிகரிப்பு மற்றும் பாதிப்புகளின் தாக்கம் 25 ஆம் திகதியளவிலேயே உணரக் கூடியதாக இருந்திருக்கும்.

ஆனால் அத் திகதிக்கு முந்திய நான்கு வாரத்தில் எடுக்கப்பட்ட சுட்டெண் அதிகரிப்பே தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

அந்தச் சுட்டெண் அதிகரிப்பே இவ்வளவு உயர்வாக இருக்கும் போது, ரூபாவின் பெறுமதியை மிதக்க விட்ட பின்னர்- அதனால் பொருள்களின் விலை எக்கச்சக்கமாகக் கூடி, சந்தையில் பொருள்களுக்கு மவுசும், தட்டுப்பாடும் ஏற்பட்ட காலத்தில்- வாழ்க்கைச் செலவுப் புள்ளியின் அதிகரிப்பு அதிர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த டிசெம்பரில் 6.2 வீதமாக இருந்த விலைவாசி உயர்வு கடந்த ஜனவரியில் 7.5 வீதமாக உயர்ந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ)




ஏழாலை தெற்கு வசந்தபுரம்
அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்

இரதோற்சவம்

07-02-2001 புதன்கிழமை

காலை : 6 மணி - அபிஷேகம்
காலை : 9 மணி - பூஜை
காலை : 10 மணி - வசந்த மண்டபப் பூஜை
காலை : 11 மணி - அம்பிகை எழுந்தருளல்

தீர்த்தோற்சவம்

08-02-2001 வியாழக்கிழமை

காலை : 7 மணி - அபிஷேகம்
காலை : 9 மணி - பூஜை
காலை : 10 மணி - வசந்த மண்டபப் பூஜை
காலை : 11 மணி - அம்பிகை எழுந்தருளல்

அம்பிகை அடியார்கள் அனைவரும் இந்த உற்சவத்தில் கலந்து அன்னையின் திருவருளைப் பெறுவீர்களாக!

-தேவஸ்தானம்.

✻ இருநாள்களும் மகேஸ்வர பூஜை நடைபெறும். (C/15161)


## கல்விச் செயலமர்வு

தென்மராட்சி,பெப்.5

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 8,11 ஆகிய வகுப்புக்களில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் மற்றும் வரலாறும் சமூகக் கல்வியும் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான- புதிய கல்விச் சீர்திருத்தச் செயலமர்வுகளின் தொடர்ச்சி அமர்வுகள் முறையே பெப்ரவரி ஏழாம், பதினொராம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (உ-117)

## சித்திரத் தேர் அமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.5

வதிரி காளையன் தோட்டம் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயிலில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள சித்திரத் தேருக்கான ஆரம்ப வேலை நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் சம்பிரதாயபூர்வமாக தொடங்கவிருக்கிறது.

இவ்வேலையை கலாபூஷணம் சுப்பிரமணியம் இராசரத்தினம் தலைமையிலான சிற்பாசாரியார் குழுவினர் மேற்கொள்ளவுள்ளனர். (உ-3-118-173)


**சோதிட நிலைய இடம்மாற்றம்**

22/1, கச்சேரி வீதியில் இதுவரை காலமும் இயங்கி வந்த வாணி சோதிடம், வாணி திருமாங்கல்ய சேவை என்பன 07.02.2001 (புதன்கிழமை) நண்பகல் 12.00 மணியல் இருந்து இல.95 சத்திரத்துச் சந்தி வைரவர் ஆலயத்திற்கு அருகில் வாடிக்கையாளர் நலன் கருதி இடம்மாற்றப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறேன்.

✻ எமக்கு வேறு கிளைகள் இல்லை.

சோதிடர்: சி.கணேசன் (83774)


# 'ஒப்படை' குறித்து பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,பெப்.5

புதிய பாடத்திட்டத்தின் கீழ் உயர்தர வகுப்புக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ள "செயற்றிட்ட வேலை" (ஒப்படை) பற்றி யாழ்.மாவட்ட உயர்தர வகுப்பு விஞ்ஞான ஆசிரியர்களுக்கு தொழிற் பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்தப்படவுள்ளது.

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம், தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நாளை காலை 8.30 மணி முதல் யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இந்தப் பட்டறை நடைபெறவுள்ளது.

39 பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 64 விஞ்ஞான ஆசிரியர்களும் 16 மூலவள ஆளணியினரும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்வர்.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் இந்தப் பயிற்சிப் பட்டறைக்கான ஏற்பாடுகளை செய்துள்ளார்.

மேற்படி பயிற்சிப் பட்டறையின் இரண்டாம், மூன்றாம் கட்டப் பட்டறைகள் முறையே மார்ச் மாதம் 7ஆம் திகதியும் ஜூன் மாதம் 6ஆம் திகதியும் பல்கலைக்கழகத்தில் நடைபெறும். (உ-7)

# பருத்தித்துறை பிரதேச செயலக கட்டடம் அமைப்பதற்குக் காணி

## புதிதாகக் கொள்வனவு செய்ய முடிவு

வடமராட்சி,பெப்.5

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கு நகரின் மத்தியில்-

பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கு அருகில் காணி ஒன்று கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதற்கென அமைக்கப்பட்ட குழு அதன் தலைவர் சி.முருகேசம்பிள்ளை தலைமையில் கூடி ஆராய்ந்துள்ளது.

காணியை கொள்வனவு செய்வதற்காக கிராம சேவையாளர் பிரிவுகள் தோறும் குடும்பம் ஒன்றிடம் குறைந்தது 150ரூபா வீதம் நிதி சேகரிப்பதுடன் பொது அமைப்புக்களிடம் இருந்தும் நிதி பெறுவது என தீர்மானிக்கப்பட்டது.

பொதுமக்களிடம் இருந்து நிதி பெறப்படும் போது வற்புறுத்தியோ சிரமங்களைக் கொடுத்தோ நிதி சேகரிக்கக் கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டது.

செயலகக் கட்டடம் அமைப்பதற்கான காணியை கொள்வனவு செய்ததும் அரச நிதியிலிருந்து செயலகத்திற்கான கட்டடம் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பருத்தித்துறை பிரதேச செயலகம் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-173)

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் சிவானந்தன்

(வரணியூர் சிவா)

வரணி, நாவற்காட்டைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்தவருமாகிய வல்லிபுரம் சிவானந்தன் 30-1-2001 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் வல்லிபுரம் - அன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் சுசீலாவின் (ஆசிரியை, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.) அன்புக் கணவரும் ரனீஸ் (A/L 2001, விஞ்ஞான பிரிவு மாணவன்,யா/மத்திய கல்லூரி), ஷமீனா (தரம் 6 மாணவி, யா/கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கொடிகாமம் தங்கராசா மற்றும் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் இராஜசிங்கம் (ஜேர்மனி), பிறேமாவதி (பிரான்ஸ்), சுதாகர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயக்குமார் (பிரான்ஸ்), தேவராசா, திருமதி புஸ்பலீலா மடத்தீன், திருமதி கமலா சுப்பிரமணியம், திருமதி விமலா இரவீந்திரன் (ஆசிரியை, யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), திருமதி லைலா புனிதராசா (கரவெட்டி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.35/15, இராமநாதன் வீதி,*
*சபாபதி லேன்,*
*யாழ்ப்பாணம்.* (83769)

தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

## ஆறுமுகம் இராசையா

(வட்டு. கிழக்கு - சித்தன்கேணி)

வட்டு. கிழக்கு சித்தன்கேணியைச் சேர்ந்த ஆறுமுகம் இராசையா நேற்று (04-02-2001) ஞாயிற்றுக்கிழமை பண்டாரவளையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், Dr.கணேசமூர்த்தி, சிவஞானமூர்த்தி (படவரைஞர்), கனகரத்தினம் (கனடா), சண்முகநாதன் (ஜெய்ப்பூர் தொழிற்சாலை) ஆகியோரின் அன்புத்தந்தையாரும், ஜெயதேவி, சிதம்பரராணி, அருணாதேவி, கனகரத்தினம், கனகாம்பிகை ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04-02-2001) ஞாயிற்றுக் கிழமை பண்டாரவளையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வட்டு. கிழக்கு,*
*சித்தன்கேணி.* (83765)

தகவல்:
இ.சண்முகநாதன்
(மகன்)

## அந்தோனி செபஸ்ரியன்

(குருநகர்)

குருநகரைச் சேர்ந்த அந்தோனி செபஸ்ரியன் 02.02.2001 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இளைப்பாறிய ஆசிரியை செபஸ்ரியன் யோசேப்பின் அன்புக் கணவரும், அந்தோனி ஜேசுதாசன் (பாடும்மீன் வி.க.தலைவர்), அந்தோனி சூரி ஆகியோரின் சகோதரரும், செபஸ்ரியன் விக்மராஜ் (ஜீவா-கவிஸ்), செபஸ்ரியன் ஜீவிதா(பல்கலைக்கழக முதலாம் வருட கலைப்பீட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்மராஜா (ஜீவா) பொறுத்தி அவர்களின் அன்பு மாமனாரும், விக்மராஜா இந்துகா, விக்மராஜா தர்சிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.02.2001) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*14/1, புதுமை மாதா மேற்கு வீதி,*
*குருநகர்.* (83772)

தகவல்:
அ.பெனடிக்ற் ராதா
(சகோதரன்)

# விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்காக பலகல்லவுக்குப் பின்னால் அணி திரளுங்கள்!

## பிரியாவிடை உரையில் ஜெனரல் ஜானக பெரேரா அழைப்பு

கொழும்பு,பெப்.5

"விடுதலைப் புலிகளைத் தோற் கடிப்பதற்காக இராணுவத் தளபதி



லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல லவின் பின்னால் அணி திரளுங்கள்!"

- இவ்வாறு இராணுவத்தினருக்கு அழைப்பு விடுத்தார் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா.

கடந்த ஜனவரி 31 ஆம் திகதி ராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்றுச் சென்ற மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தமது பிரியாவிடை உரையிலேயே இப்படி அழைப்பு விடுத்தார்.

அந்த உரையில் அவர் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு:-

தனிப்பட்ட நபர்கள் பற்றிய விடயம் முக்கியமானதல்ல. வெற்றிக்கான இலக்கும் யுத்தம் புரிபவர்களின் பாதுகாப்பும் நலனுமே முக்கியமானவை.

நாட்டுக்கும் இராணுவத்துக்கும் 34 வருடங்கள் சேவையாற்றக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

1971 ஏப்ரலில் இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது யுத்த முனையில் இருந்தேன். 1989 இல் இரண்டாவது கிளர்ச்சியை அடக்குவதில் முக்கிய பங்காற்றினேன். கடந்த வருடம் யாழ்ப்பாணத்தை மீளக் கைப பற்றுவதற்கு புலிகள் எடுத்த முயற்சியை முறியடிப்பது வரையான முக்கிய இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகள் அனைத்திலும் ஈடுபட்டுள்ளேன.

கடந்த காலங்களில் இராணுவம் பெருமைப்படும் விதத்தில் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு வெற்றியிலும், முயற்சிகள் அனைத்திலும் முக்கிய வீரனாகப் பங்குபற்றி, முழு ஈடுபாட்டுடன் செயற்பட்டுள்ளேன்.

அடிப்படை உத்திகளையும் தந்திரோபாயங்களையும் காலஞ்சென்ற ஜெனரல்கள் டென்சில் கொப்பேகடுவ, விஜய விமலரட்ண போன்றோரின் கீழ் கற்றுக்கொள்ளும் பெரு வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

நான் பேராசை பிடித்தவன் என்றும் இராணுவத் தளபதியாக வர வேண்டும் என்றும் ஆசை கொண்டு அலைந்ததாகவும் சிலர் கூறுகின்றனா.

இராணுவ அதிகாரிகளுக்கும் ஆசை உண்டு. அப்படி ஆசை இல்லா விட்டால் அவர்கள் வாழ்க்கையில் அர்த்தமில்லாமல் போய்விடும். ஒரு கொமாண்டோ என்ற முறையிலும் பரசூட் மூலம் குதிக்கும் வீரன் என்ற முறையிலும் எனக்கும் ஆசைகள், இலக்குகள் இருந்தன. ஆனால் பதவி அதிகாரத்தால் வரும் ஆணவமோ சிறப்புரிமைகளோ எனது ஆசைகளாக இருக்கவில்லை.

விடுதலைப் பு[illegible]களைத் தோற்கடிக்கச் செய்யு[illegible] திறமையும் அறிவும் என்னிடம் இருப்பதாக நான் கருதுகிறேன்.

என்றாலும் நான் இராணுவத் தளபதியாக இருக்கக்கூடாது; அந்தப் பெருமையும் வாய்ப்பும் லெப்ரினன்ட் ஜெனரல் பலகல்லவுக்கே வழங்கப் படவேண்டும் என்று இது விடயத்தை தீர்மானிக்கும் சக்திகளும் மேலே இருக்கும் கடவுளும் தீர்ப்புச் சொல்லியாகிவிட்டது.

நாங்கள் அனைவரும் நாடக மேடையின நடிகர்கள். எங்கள் பாத்திரத்தை நாங்கள் நடிக்கின்றோம். திரை வீழ்ந்ததும் நாம் வெளியேறியாக வேண்டும்.

விடுதலைப் புலிகளை இராணுவம் தோற்கடிக்கும் நாளை எதிர்பார்த்து காத்திருக்கின்றேன்.நான் சிறப்பாகப் பணியாற்றினேன் என்ற முழு நம்பிக்கையுடன் தங்கள் மனதில் எனக்கு ஓர் இடத்தை மக்களும் இராணுவத்தினரும் கொடுக்க வேண்டும் என்பதையே நான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றேன்- என்றார். (உ)

## மார்ச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணர்வு ஒப்பந்தம் பற்றிய ஆவணங்களைத் தீவிரமாக ஆராய்ந்த அரசுத் தரப்பு, சில திருத்தங்களுடன் அதை ஏற்பதற்குத் தயாராக இருப்பதாக நோர்வேக்குப் பதில் அளித்தது.

சமாதானப் பேச்சுக்கு தமது இணக்கத்தைத் தெரிவித்து, அதனோடு தொடர்புபடுத்தி, விடுதலைப் புலிகள் முன்வைத்த சில விடயங்கள தொடர்பாக, அரசு திட்டவட்டமான பதிலை அறிவிக்கவில்லையாயினும், அது தொடர்பாக சாதகமான பதில் ஒன்றை சொல்ஹெய்மிடம் தெரிவித்துள்ளதாகக் கூறப்பட்டது.

பெரும்பாலும் இரு தரப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் அடுத்த மாதம் 2ஆம் வாரத்தில் ஒஸ்லோவில் ஆரம்பமாகலாம் என்றும் -

இதில் அரசு சார்பில் சிரேஷ்ட அமைச்சரான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் பங்குபற்றலாம் என்றும் -

கொழும்பில் அரசுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை அரசாங்கத்துடன் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பாக சொல்ஹெய்ம் புலிகளுடன் தொடர்பு கொள்ளவிருக்கிறார். (உ-3)

## புலிகள் தரப்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்களை நடத்துவது தொடர்பாக விடுதலைப் புலிகளிடமிருந்து ஓரளவு சாதகமான பதில் கிடைத்துள்ளது. சமாதானமே அரசின் தூரதிருஷ்டியான கொள்கையாகும் எனவே இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வது அவசியம்.

என்ன யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டாலும் சமாதானத்தை அடைவதற்காக அவற்றை ஆராய்ந்து சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கான கதவை அரசாங்கம் ஒருபோதும் மூடியது கிடையாது. ஆனால் தமிழீழத்தை உருவாக்குவது பற்றியோ அல்லது நாட்டைப் பிளவுபடுத்துவது பற்றியோ அரசாங்கம் ஒருபோதும் ஆராயமாட்டாது.

அனைத்து மக்களும் ஐக்கியப்பட்டு சமத்துவத்தோடும், கௌரவத்தோடும் வாழக்கூடிய ஒரு தீர்வைக் காண்பதற்காகவே இந்தப் பேச்சுக்கள் நடத்தப்படும்.

அர்த்தமற்ற யுத்தநிறுத்தங்களை ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. பேச்சுக்கள் ஆரம்பமாகி அவை திருப்திகரமாக நடக்கும்போது உண்மையான யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறித்து ஆராயப்படும்.

முக்கியமான பிரச்சினைகள் பற்றித் தெளிவான அரசியல் அடிப்படையிலேயே பேச்சுக்களை ஆரம்பிக்கமுடியும்.

தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கத்துடன் புலிகளை சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடச் செய்வது தமிழ் மக்கள் உட்பட சமாதானத்தை நேசிகும் அனைவரதும் கடமையாகும்.

அரசாங்கம் தமிழ்மக்கள் தொடர்பாகவும், ஏனைய சிறுபான்மையினர் சம்பந்தமாகவும் கடைப்பிடிக்கும் நேர்மையான, சரியான அணுகுமுறையை சர்வதேச சமூகம் பாராட்டி இருக்கிறது.

உள்நாட்டு யுத்தத்துக்கு முடிவு கட்டவும், பொருளாதாரத்தை மீண்டும கட்டியெழுப்பவும் வழி காண்பதற்கான தருணத்தில் நாம் இருக்கின்றோம்.

யுத்தமும், மோதலும் இல்லாத - அனைவருக்கும் சுதந்திரமும், சமத்துவமும் கிடைக்கின்ற - அமைதி பூர்வமான சமூகத்தில்தான் தேசிய சுதந்திரத்தின் பரிபூரணப் பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தற்போது நம்பிக்கையின் ஒளி தென்படுகிறது. இந்த ஒளி சுதந்திரத்தின் முழுமையான பயன்களை அடைவதற்கு எமக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தைத் தரும். எமது குறிக்கோள்களை அடைவதற்கான நல்ல சகுனமாக இந்த ஒளியினை நாம் எடுத்துக்கொள்வோம். இதை ஒரு கலங்கரைவிளக்கமாக்கும் போது எமது தாயகத்தின் சுதந்திரத்தை அது நிச்சயமாகப் பலப்படுத்தும் - என்றார். (உ-7-ரி)

# வடக்கு – கிழக்கில் இந்த வருடம் 3,000 பேருக்கு ஆசிரிய நியமனம்

யாழ்ப்பாணம்,பெப்.5

வடக்கு- கிழக்கில் மூவாயிரம் பேருக்கு இந்த வருட இறுதிக்குள் ஆசிரிய நியமனங்கள் வழங்கப் படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.

மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மூவாயிரம் பேரில் ஆயிரம் பேர் தற்போது தொண்டர் ஆசிரியர்களாகவும், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகவும் கடமையாற்றிவர்களிலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

மற்றும் ஆயிரம் பேர் பட்டதாரிகளிலிருந்து தெரிவு செய்யப்படுவர்.

ஏனையோர் உயர்தரப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர் -என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-7)

## யாழ்.செயலக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதனா வைத்தியசாலை மற்றும் இலங்கை மின்சாரசபை, பிரதேச செயலகங்கள், அரச திணைக்களங்கள் ஆகியவற்றின் அலுவலகங்களில் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டன. (உ-5-15-139-173-72)

## ஐ.தே.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுப்பினர்.

'உடனே யுத்தத்தை நிறுத்து', 'நாட்டை ஆள முடியாவிட்டால் பதவி துற' போன்ற கோசங்கள் எழுப்பப் பட்டன.

கட்சியின் முக்கிய தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும பாதயாத்திரையை வழி நடத்திச் சென்றனர்.

பிற்பகல் 4மணியளவில் மாவனல்லையை பாதயாத்திரை வந்தடைந்ததுடன் அது நேற்று இடைநிறுத்தப்பட்டது.

இன்று அங்கிருந்து பாதயாத்திரை புறப்பட்டு கல்கமுவவை அடையும். (உ-3-7)

## நல்லூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்தனர் எனவும் -தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

படையினர் அவர்களைச் சோதனை செய்தபோது ஒரு கிரனேட் மீட்கப் பட்டதாகவும்-

அவர்களுக்குச் சொந்தமான இரு சைக்கிள்களும் கைப்பற்றப் பட்டுள்ளதாகவும்-தெரிவிக்கப்பட்டது.

## பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் சுதந்திரத்துக்கு சாவுமணி அடித்த நாள்"

"இலங்கையின் சுதந்திர தினம் சிங்களப் பேரினவாத அடக்குமுறையின் ஆரம்ப நாள்"

"கறுப்பு பெப்ரவரி 4 ஆம் நாள் தமிழ் தேசிய இனத்தின் வாழ்வுரிமை சிங்கள பேரினவாத சக்திகளிடம் தாரை வார்க்கப்பட்ட இருண்டநாள்"

-என்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் அங்கு ஒட்டப்பட்டிருந்தன. (உ-5-15-72-173-139)


**சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்**
233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**வருடாந்தப் பொதுக்கூட்டம் 2001**

காலம் :- 18-02-2001 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- காலை 10.00 மணி
இடம் :- யாழ்.மத்திய கல்லூரி

G.பற்குணராஜா
செயலாளர்
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்
365, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:-
மதியபோசனத்தில் கலந்து கொள்ள விரும்பும் அங்கத்தவர்கள் 16 ஆம் திகதிக்கு முன் செயலாளரிடம் ரூபா 100 செலுத்தி பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.
(C/15162)

**SUBRA (14)**
சித்தன்கேணி
பௌதிகவியல்
MR.ஜெயம்
2001 A/L
ஓட்ட மின்னியல்
2002 A/L
அதிர்வுகளும் அலைகளும்
ஆரம்பம்: 07-02-2001
புதன் - 4.00 p.m
DAY CLASS
இணைந்த கணிதம்
A.பத்மநாதன்
இரசாயனவியல்
அன்பு
நடைபெறுகிறது.
(83714)

**வெளிவந்துவிட்டது**
க.பொ.த.உயர்தர உயிரியல் மாணவர்களுக்கான
'IDENTIFICATION OF FISHES AND PRAWNS'
எனும் கைந்நூல் வெளிவந்துவிட்டது.
மாணவர்களுக்குப் பல்தேர்வு வினாக்களுக்கு கை கொடுக்கும்.
ஆக்கியோன்:- K.SUGANTHAN. B.Sc.
ஏகவிநியோகஸ்தர்:-
பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (83665)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக
சாவகச்சேரி
**கீதா ஆபரண மாளிகை**
இன்று (05-02-2001) திங்கள் முதல் எமது ஸ்தாபனம் K.K.S.வீதி, குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில் எனும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.
K.K.S.வீதி,
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில். (83732)
உரிமையாளர்,
கீதா ஆபரண மாளிகை.

**A/L 2001 DAY**
அளவையியல்
S.S.மனோகரன்
செவ்வாய்
காலை 6.30
ஸ்ரீகாந் கல்வி நிலையம்
இணுவில்.
(83761)


## மரண அறிவித்தல்

### திருமதி தம்பையா அன்னப்பிள்ளை

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பையா அன்னப்பிள்ளை 03.02.2001 சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும், திருமதி சிவகுரு ஞானப்பூங்கோதை, திருமதி வை.கணேசபிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி), பராபரம் (ஜேர்மனி), சொக்கலிங்கம் (உப அதிபர், கோண்டாவில் பரஞ்சோதி மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நா.கணேசபிள்ளை(ஓய்வு பெற்ற பிரதி அதிபர், யா/இணுவில் இந்துக் கல்லூரி), திருமதி ப.செல்வராணி (ஆசிரியை, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.) திருமதி சொ.சரஸ்வதி (யாழ்.மாநகரசபை) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி ச.தவயோகராணி (சத்தியமூர்த்தி-தபாலதிபர்-தெல்லிப்பழை), திருமதி சி.யோகேந்திரா (ஜேர்மனி), திருமதி ந.புஸ்பரதி (ஜேர்மனி), சுதாகரன், ஹரிகரன், பிரபாகரன் (ஜேர்மனி), சசிகுமாரன், ஹரிகஜன், சிவரூபன், திருவாரூரன், ஹரிசங்கர், கஜனி, இந்துமதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மீரா, மதுரா, மதனமோகன், சிவகஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று (04.02.2001) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் தாவடி இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் தெற்கு,*
*இணுவில்*

(C/15163)

தகவல்:
த.சொக்கலிங்கம்
(மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.02.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.